வைத்திய அரிச்சுவடி

பதிப்பாளர்:
அ. குழந்தைவேல் முதலியார்,
விலாசம் பிரஸ்
பிள்ளை வீதி, சென்னை

ஆரிய அனுபோக ரகஸ்ய

வைத்திய அரிச்சுவடி

நான்கு பாகங்கள்

பதிப்பாளர்:

அ. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாசம் பிரஸ்

24. தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

ஓம் பரப்பிரம்மணே நமஃ

ஆரிய அனுபோக ரகஸ்ய

வைத்திய அரிச்சுவடி

(1-2-பாகங்கள்)

இவை

தமிழ்ப் பண்டிதரும், நேடிவ் டாக்டரும்

பஞ்சபக்ஷி கணித ஜோதிடருமாகிய

கொர்க்கோட்டை

ப. வடிவேலு செட்டியார் அவர்கள்

எழுதப்பட்டதை,

பூ. து. மாசிலாமணி முதலியாரிடம்

சர்வ சுதந்தரமும் பெற்று,

★

அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாசம் பிரஸில்

பதிப்பித்தது.

பதிப்புரிமை] 1951 [பெற்றது

24. தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

OFFICE 26 JUN 951

N51;1
101768

காபிரைட் அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பதுயாதெனில்:— இந்த "ஆரிய அனுபோக ரகஸ்ய வைத்திய அரிச்சுவடி" என்னும் நூலை, தமிழ்ப் பண்டிதரும், நேடிவ் டாக்டரும், பஞ்சபக்ஷி கணித ஜோதிடருமாகிய ஸ்ரீமான் - கொரக்கோட்டை. ப. வடிவேலுசெட்டியார் அவர்களால் எழுதி முடிவு பெற்றதை, சென்னை புரசை வல்லம் பங்காரு செட்டிவீதி 25-வது நெ. வீட்டிலிருக்கும் பூ. சு. துளசிங்கமுதலியார் குமாரர் பூ. து. மாசிலாமணி முதலியாருக்கு சகல சுதந்தரமும் கொடுத்துவிட்டமையால், அவர் தமது சுந்தர விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பித்து தன் பேரால் கவர்ன்மெண்டார் சட்டப்படி ரிஜிஸ்டர் காபிரைட் செய்யப்பட்டுத் தான் அனுபவித்து வந்ததை, ஷெ பூ. து. மாசிலாமணிமுதலியார் அவர்களிடம் அடியில் கையொப்பமிட்டுள்ள யான் கிரயத்திற்குப் பெற்று என்னால் அச்சிட்டு ரிஜிஸ்டர் காபிரைட் செய்து வெளியிட்டுள்ளேன். ஆகையால் இதனை என்னுடைய அனுமதியின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதைத் தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

இப்படிக்கு

அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாச அச்சுக்கூடம்

24. தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

உ

கடவுள் துணை

ஆரிய அனுபோக ரகஸ்ய

வைத்திய அரிச்சுவடி

(முதற்பாகம்)

விநாயகர் வணக்கம்

ஆதிபரா பரமான தாயின் பாதம்
அன்புடனே கருத்தினிலே பூசை யாற்றி
சோதியென்ற ரவிமதியின் சுழிலே போற்றி
சொல்லுக்குமுதற்பொருளாம்ஒற்றைக்கொம்பன்
நீதியுள்ள ஞானகலை தீபம் போற்றி
நிகழ்த்துவோம் வைத்தியத்தின் ஆதி யந்தம்
ஓதிவந்த சித்தர்பதம் மனதி லுண்ணி
உலகமிசை செப்புதற்குக் காப்பு தானே.

வைத்திய திறவுகோல்

வைத்தியம் என்பது நமக்குண்டாகும் வாத-பித்த - சிலேத்தும திரிதோஷங்களை பரிகரித்து, "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என, சுகாதார ஜீவாதார பூரண ஆயுளோடு உலகில் போக பாக்கியங்களை அனுபவிக்கும் விதி விலக்குகளை விளக்கிக்காட்டும் உயர்தர ஆயுர்வேதமாகும்.

வைத்தியம் செய்யப்பட்டவர்களும், வைத்தியம் கற்றுக்கொள்ள விருப்ப முடையவர்களும்

சுலபமாக சீக்கிரத்தில் வைத்தியம் தெரிந்துகொள்வதற்கு இந்த வைத்திய அரிச்சுவடி அனுபவ போதனை முறையாகும்.

வைத்திய பாண்டித்தியம் அடைய விருப்பம் உடையவர்கள் ஆசார சீலர்களாகவும், தேவதா சிந்தனை யுடையவர்களாகவும், அறிவுடையோர் வாக்கிய பரிபாலனர்களாகவும், சரீர தத்துவ விசாரணை யுடையவர்களாகவும் இருக்கவேண்டும்.

இத்தகைய நன்னெறி நல்வழிகள் அமைக்கப் பெற்றவர்களாகி, மூலிகைகள், கடைச்சரக்குகள், பாஷாண முதலிய ஒளஷத பதார்த்த குணாகுணங்களை ஐயந்திரிபறத் தெரிந்து, நோய் உற்பவமாகும் காரணமும், அதனை நிவர்த்திக்கவேண்டிய வழிகளும் தெரியவேண்டும்.

ஒளஷத பதார்த்த விசாரணை யுண்டானபோதே ஒவ்வொரு வஸ்துவையும் விஷமுள்ளதா? விஷமில்லாததா? எனத் தெரிதல்வேண்டும். விஷத்தன்மையுடையதாயின் அவைகளுக்கு சுத்திபாகம் இருக்கிறதா? எனத் தெரிதல் வேண்டும். சுத்தியுள்ளதாயின் கைபாக செய்பாக தீக்ஷைபாகப்படி தம்முடைய அறிவின் விசாரணையாலும், தம்மினும் அனுபவமுடைய மூதோர்களாலும் சரிவர சுத்தி செய்து பிரமாணப்படி உபயோகப்படுத்தவேண்டும். பிரயோக காலங்களில் நோய் திடமும், சரீர நிதானமும், ஒளஷதப் பிரமாணமும் அறிந்து மருந்துகளைப் பிரயோகிக்கப்படுத்தவேண்டும். அவ்வாறு செய்து பிரமாணம் அதிகப்பட்டும், விஷமிக்கும் தன்மையும் உண்டாகும் பக்ஷத்தில் அதற்கு அதே

சமயத்தில் தடுப்பதற்கும் முறிப்பதற்கும் தெரிந்து கொள்ளவேண்டும்.

நோயாளியை பரிக்ஷிக்கும்போது பெரு நூல்களில் சொல்லிய அபார பரிக்ஷையாகிய அஷ்ட வித பரிக்ஷைகளில் முக்கியமாகிய வாத பித்த சிலேத்ம தோஷங்களை மல ஜல தேக சப்த லட்சணங்களாலும், நாடிப் பரிக்ஷையாலும், பிணியாளரின் வாய் மொழியாலும் இன்னதென நிர்தாரணிக்க வேண்டியது. இதுவே 'நாடி பார்' என்பதற்கு, புத்திமை 'நாடிப்பார்' என்பதாகும்.

நாடிகளில் முக்கியமாக அறியவேண்டியதாவது: குருநாடி வாதத்தில் அதிகாரம் செய்யும்போது கோழியைப்போலும், அன்னத்தைப்போலும், மயிலைப்போலும் நடக்கும். பித்தத்தில் அதிகாரம் செய்யும்போது ஆமையைப்போலும், அட்டையைப் போலும் நடக்கும். சிலேத்மத்தில் அதிகாரம் செய்யும்போது தவளையைப்போலும், விட்டிலைப்போலும் தெரித்து நடக்கும். இதுவே முக்கிய அம்சமாகும்.

வைத்தியத்தில் முதலிலேயே ரச கந்த பாஷாணாதிகளை உபயோகப்படுத்தப்படாது. அவைகள் பெரும்பாலும் சரீரத்தை பலஹீனப் படுத்தும். ஆனதினால் லகுவான கியாழம், சூரணம், லேகியம், எண்ணெய், பஸ்பம் முதலியவைகளால் முறையே பரிகாரம் செய்யவேண்டும். சிறிதும் பெரிதும் அசாத்திய ரோகங்களுக்கே பாஷாணாதிகளைப் பிரயோகப் படுத்தவேண்டும்.

ஆவசிகமாக மானிடர்களுக்கு திடீரென அகஸ்மாத்தாய் பிராணபத்தைக் கொடுக்கக்கூடிய நோய்கள் நான்காகும். அதாவது: மலம்-ஜலம்-ஜன்னி-பாரிசவாய்வு என்பதாகும். இதுகளில் மலம் ஒருவருக்கு அடைபட்டால் ஆபத்தாகும். அம்மலமே அதிகமாக விரோசனமானுல் (கால்ரா) பிராணபத்தைக் கொடுக்கும். ஜலம் தடைபட்டால் வயறுப்பி சுவாசம் போக்கடைந்து கொல்லும். அந்த ஜலமே அதிகமாக பிரயோகப்படுமாயின் சீக்கிரத்தில் பலத்தைக்குறுகச்செய்து டரகதியாக்கும். ஜன்னி அளவு கடந்தால் (105-டிக்கிரி) மரணத்தை யுண்டாக்கும். பாரிசவாய்வு சில தாமதபாகவும், பெரும்பாலும் தோன்றிய சமயமே காலனைக் காணச்செய்யும். ஆனதால் வைத்தியர்கள் இந்த நான்கு நோய்களின் உற்பவமும், அதேசமயத்தில் பரிகரிக்கத் தக்க அனுபவஔஷதமும் முதலில்தெரிந்துக்கொண்டே பிறகு தாமத வைத்திய ஔஷதங்களை தெரியவும் ஆராயவும் பிரயோகிக்கவும் வேண்டும். இன்னும் வைத்தியர்களுக்கு வேண்டிய முக்கிய ரகசிய அனுபவ விஷயங்களெல்லாம் அருமையான வைத்திய நூல்களில் விரிவாய்க் காணலாம்.

மக்களின் பிணிகள் பலவற்றிற்கும் ஆரம்பமாயிருத்தல் மாந்தம் என்னும் அஜீரணமே யாகும். இந்த மாந்தத்தை நீக்க இங்கு சுலபமான சிறுமுறைகளைக் குறிப்பிட்டிருப்பதால் அவரவர்கட்கு எற்றதைச் செய்து கொடுத்து எளிதில் நோய்களைப் போக்கிக்கொள்ளலாம்.

மாந்தம் தீர கியாழம்

1 வேளைவேர்
2 சுக்கு (தோல் சீவியது)
3 வெந்தயம்
4 வெள்ளைப்பூண்டு (தோல் போக்கியது)
5 ஆடுதின்னாப்பாளைவேர்
6 வசம்பு
7 ஓமம்

இவை வகை ஒன்றுக்கு ஒருசல்லி (தம்பிடி) எடை.

செய்முறை:- மண் சட்டியை அடுப்பில்வைத்து ஒவ்வொன்றையும் தனித்தனியே இளவறுப்பாக வறுத்துக்கொண்டு ஒன்றிரண்டாக தட்டிக்கொண்டு மூன்சட்டியை அடுப்பில் வைத்து அதில் கால்படி தண்ணீர்விட்டு நன்குக கொதிகண்டபின் மேற்படி சரக்குகளையெல்லாம் இக்கொதிதண்ணீரில்போட்டு மேல்சட்டிமூடி நிதானமாகதீயிடவேண்டும். பெருந் தீ கூடாது. இப்படி மெதுவாக தீயிட்டு முக்கால் பாகம் சுண்டின பதத்தில் இறக்கி மேல்சட்டியை திறக்காமலே ஆறவிட்டு, இளஞ்சூடாயிருக்கையில் வடிகட்டி அரை சங்கு (பாலடை) உள்ளுக்குக் கொடுக்கலாம். பிறகு மாலையில் மறு அரை சங்கு (பாலடை) கியாழம் தரலாம். இப்படி தினேதினே புதிதாகச்செய்து மூன்றுநாள் காலை மாலையாக ஆறு வேளை கொடுக்கலாம். இதனால் மாந்த ரோகங்கள் பல குணமாகலாம். மூன்றுநாளைக்குமேல் புகட்டக் கூடாது.

பாக பேதம்

வேளைவேர், ஆடுதின்ணுப்பாளைவேர் இவை இளசாகவிருந்தால் அப்படியே சேர்த்துக் கொள்ள லாம். அதிகமாக முத்தியிருந்தால் அந்த வேர்களின் பட்டையைமட்டில் எடுத்து ஒருசல்லி எடை நிறுத் துக்கொள்ளவேண்டும்.

இந்தக் கியாழத்தை ஒருதினம் காலை மாலையாக இருவேளை கொடுத்து மறுநாள் காலை தேகநிலையைக் கவனித்து குணம் இருப்பதாகக்கண்டால் அதோடு நிறுத்திவிடவேண்டும். இன்னும் சற்று நோய் இருப்பின் மறுநாளும் மூன்றும்நாளும் புதிது புதி தாக செய்து கொடுக்கலாம்.

நோய் உடனே நீங்கினும் நீங்காவிடினும் 3-தினங்களுக்குமேல் கொடுக்கக்கூடாது உட்சென்ற கியாழம் ஊற ஊற இரண்டொரு தினங்களில் குணம் தெரியும்.

இந்த ஒரே கியாழத்தைக் குழந்தைகளின் வய துக்குத் தக்கபடி அளவை குறைத்தும் கூட்டியும் மாதத்தில் இரண்டுமுறை (1-2-3-நாள்களாக)சமை யோசிதப்படி கொடுத்துக்கொண்டேவந்தால் வேறு மருந்தில்லாமல் (நோய்கள் நெருங்காமல்) சேய்கள் செவ்வனே வளரும்.

நோய் உள்ள குழந்தைகட்கு மாத்திரமன்றி எல்லாக் குழந்தைகட்கும் மாதத்தில் இருமுறை கொடுத்து வரலாம். அதனல் அஜீரணரோகம் ஏற் படாமலே நல்ல ஜீரணசக்தியுண்டாகி சுருசுருப்பும்

படபடப்பும் பெற்று குழந்தைகள் ஆரோக்கியமாய் இருக்கும்.

குணம்

இந்தக் கியாழத்தில் சுரம், பேதி, வாந்தி, வாந்திபேதி, வயிறுப்பல், வயிற்றுவலி, மலக்கட்டு, மாந்தம், கோழை, சளிப்பு, அஜீரணம், பால்கட்டு, மலத்தில் காணும் சிறு (கிரிப்) பூச்சு முதலியன நீங்கி குணமாகும்.

பத்தியம்

குழந்தைகளைப் பாதுகாக்க பத்தியமே முக்கியமானதாகும். பத்தியம் என்றால் உப்பும் - புளியும் தள்ளுவதல்ல; கடுகும்-எண்ணெயும் நீக்குவதல்ல. காப்பிக்குடிவகை, மச்சமாமிசம் புலால்வகைகளை தாயார் அத்யாவசியம் நீக்கிவிடவேண்டும்.

"வாயைக் கட்டினால் பிள்ளை
வயிற்றைக் கட்டினால் புருடன்"

என்ற சாதாரண வார்த்தையைப் பேராதாரவாகக் கொள்ளல் வேண்டும்.

மாந்தந்திர வேறுவகை

1 வேப்பிலைக் கொழுந்து
2 சுக்கு (தோல் சீவியது)
3 மிளகு
4 சீரகம்
5 வெள்ளைப்பூண்டு (தோல் நீக்கியது)

6 ஓமம்
7 உப்பு

தனித்தனி ஒரு கல்லி (தம்பிடி) எடை

செய்முறை:—ஓமம், சீரகம், மிளகு இவற்றில் கல்-மண்-தூசு-வேறுதினுசு முதலிய ஒன்றும் இல்லாமல் சுத்தமானதாகப் பார்த்து நிறுத்து எல்லாம் சேர்த்து அம்மியில் வெண்ணெய்போல் அரைத்து வெந்நீரில் கரைத்து வடித்து, திப்பி நீக்கிய அந்த சாற்றில் ¼-½-பாலடை (சங்கு) அளவு எடுத்து அதில் தாய்ப்பால் அல்லது வெந்நீர் கொஞ்சம் விட்டுக் கலந்து குழந்தைக்குக் கொடுக்கவும்.

கவனிப்பு

இது சற்று காரம் உள்ளது. ஆகையால் குழந்தையின் வயதையும் தேகதிடத்தையும் கவனித்து அதற்குத் தக்கபடி அளவைக் குறைத்தும் அதிகப்படுத்தியும் கொடுக்கவேண்டும்.

காரம் தாங்காத குழந்தையானல் தாய்ப்பாலேயாகிலும் வெந்நீரையாகிலும் சற்று அதிகமாக விட்டு இளங் காரமாகவே கொடுக்க வேண்டும். குணம் முன் கியாழம் போலவே.

மாந்தந்திர கியாழம்

1 சுக்கு (தோல் சீவியது)
2 கெட்டிமிளகு
3 அரிசிதிப்பிலி

4 ஓமம் (கல் மண் நீக்கி சுத்திசெய்தது)
5 வெள்ளைப்பூண்டு (தோல் போக்கியது)

தனித்தனி சல்லி எடை ஒன்று

செய்முறை:—மேல் சரக்குகளை ஒன்றிரண்டாய்த் தட்டி (நசுக்கி) சுத்தமாகிய வெள்ளைத்துணியில் தளர்ச்சியாய் முடிந்துகொண்டு, மண்சட்டியில் கால்படி தண்ணீர்விட்டு கொதிக்கக் காய்ச்சி அதில் இந்த முடிச்சியைப் போட்டு மேல்சட்டிமூடி வீசம் படி இருக்கும்படியாக சுண்டக் காய்ச்சி மூடிய படியே ஆற்றி சூடாறியபின் அந்த கியாழத்தை இறுத்து வடித்து, வயது - தேகதிடம் - ரோகநிலை இவற்றிற்குத் தக்கபடி கால் அரை பாலடைவீதம் தாய்ப்பால் வெந்நீர் இவை ஒன்றில் கூட்டிப் புகட்டலாம்.

இதுவும் காரமுள்ளது. ஆகையால் வேண்டிய அளவு பாலோ வெந்நீரோ சேர்த்துக் காரத்தைக் குறைத்துக் கொடுக்கவேண்டும்.

குணம்:—பத்தியம் யாவும் முன் கியாழங்களுக்குச் சொல்லியது போலவேயாம்.

சுரம்திரக் கியாழம்

1 சுக்கு (தோல் போக்கியது)
2 கெட்டிமிளகு
3 சிறுதேக்கு
4 பேய்ப்புடல்
5 தேசாவரம் (கண்டதிப்பிலி-மோடி)

இவை கடை தினுசு

6 தாதுவேளை இலை
7 துளசி இலை

இவை தோட்ட தினுசு

வகை ஒன்றுக்கு பலம் கால்

இவற்றை தனித்தனி இளவறுப்பாக வறுத்து கடை சரக்குகளைமட்டில் ஒன்றிரண்டாய்த் தட்டி அரைப்படி தண்ணீரை மண்பாத்திரத்தில் கொதிக்கக் காய்ச்சி இதில் கடைசரக்குகளைப் போட்டு அரைபாகம் தண்ணீர் சுண்ட எரித்து, பின் இலை தினுசு இரண்டையும் போட்டு கால்பாகம் சுண்டும்படி மூடியபடியே தீயிட்டு ஆற்றிக்கொண்டு தேகம்-ரோகம்-வயது இவற்றிற்குத் தக்கபடி கால் அரை சங்கு (பாலடை) வீதம் தினம் (காலை பகல் மாலை) ஆக மூன்றுமுறைவீதம் மூன்றுநாள் தரலாம்.

குணம்:—மாந்த சுரங்கள் தீரும்.

குறிப்பு:—தேசாவரம் - கண்டதிப்பிலி - மோடி என்பன யாவும் ஒரு பொருளின் பெயர்களே.

சுரம்தீரக் கியாழம்

1 சிந்தில்கொடி
2 விலாமிச்சு
3 பற்பாடகம்
4 கோரைக்கிழங்கு
5 சிறுதேக்கு
6 சந்தன சக்கை
7 வெட்டிவேர்

இவை கடைசரக்கு

8 விஷ்ணுகாந்திச்செடி
9 முசுமுசுக்கை இலை

இவை தோட்ட தினுசு

வகை ஒன்றுக்குப் பலம் கால்

தனித்தனி சற்று வறுத்து, நசுக்கவேண்டிய வற்றை ஒன்றிரண்டாய் நசுக்கி, ஒருபடி தண்ணீர் மண்பாத்திரத்தில் விட்டு கொதிக்கக்காய்ச்சி இதில் கடைசரக்குகளைப் போட்டு அரைபாகம் சுண்ட வைத்து, பின் விஷ்ணுகாந்தி, முசுமுசுக்கை இரண்டையும் போட்டு கால்பாகம் சுண்டும்படி எரித்து மூடியபடியே ஆற்றி வடித்து, தேகம் ரோகம் வயது முதலியவற்றிற்கேற்ப கால் அரை பாலடை (சங்கு) வீதம் தினம் மூன்றுமுறையாக மூன்றுநாள் தர மாந்தசுரங்கள் தீரும்.

பத்தியம் முதலியவை முன்போலவே.

குறிப்பு:—தேகம், ஆடை, ஆகாரம், வசிப்பிடம் இவை எவ்வளவிற் கெவ்வளவு சுத்தமாக விருக்கின்றதோ அவ்வளவும் சுகாதாரத்திற்கு ஏற்றதாகை யால் நோய் கூட்டம் பற்றுவெனல் அனுபவம்.

“ வைத்தியர்க்குக் கொடுப்பதை
வாணியர்க்குக் கொடு ”

என்பது நம்நாட்டுத் தொன்மைமொழி. குடும்பத்தலைவனும் தலைவியும் எள்ளெண்ணெய் ஆமணக் கெண்ணெய் இவ்விரண்டையும் எவ்வளவு அதிகமாக உபயோகித்து வருகின்றார்களோ அவ்வளவும் சுக்கில சுரோணிதங்கள் வன்மையுடன் தண்மையும்

பெறும். இவ்வன்மை தன்மைக் கேற்ப கெர்ப்ப வாசம் அமையும். இவ்வமைப்பிற்குத் தக்கவாறே சிசுக்கள் உதித்து உலகை நிலவச்செய்யும். ஆகவே, பலவியாதிகளை உண்டாக்கும் கடைநெய்யைவாங்கி உபயோகித்து சுக்கிலசுரோணிதங்களைக் கெடுத்துக் கொள்வதைநீக்கி, எள்ளெண்ணெய் ஆமணக்கெண்ணெய்களையே எல்லாவற்றிற்கும் சேர்த்துவருதல் சிறந்த சுகவாழ்வாகும் அனுபவமுமிதுவே.

குழந்தைகளுக்கு கார உருண்டை

சீரகம், கறிவேப்பிலை, உப்பு, மிளகு, ஓமம் இவைகளை சமனிடை எடுத்து நல்ல ஜலம் விட்டு அரைத்து தேகதிடமறிந்து 1-2 - சுண்டைக்காய்ப் பிரமாணம் கொடுக்கவும். குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களை வரவொட்டாமல் தடுத்து பசி தீபனமுண்டாகி சுகாதாரமாக்கும்.

கர்ப்பந் தரிக்க மருந்து

அரைவிராகனிடை வால்மிளகு, ஒருவிராகனிடை கற்கண்டு இவ்விரண்டையும் அரைத்துச் சாப்பிடவும். இவ்வாறு காலை மாலை 7-நாள்சாப்பிட கர்ப்பமுண்டாகும். பத்தியமில்லை.

வேறு

பொன்னுவாரை விரை அரை அல்லது ஒரு விராகனிடை பசும்பாலில்சேர்த்து 8-நாள் சாப்பிட கர்ப்பமுண்டாகும். பத்தியமில்லை.

குழந்தைகளுக்கு பசிதீபன முண்டாக லேகியம்

ஏலக்காய், சீரகம், மிளகு, திப்பிலி, சுக்கு வகைக்கு பலம்—1 இவையெல்லாம் பொன்வரலாக வறுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து, ஆழாக்கு எலுமிச்சம்பழரசத்தில் 10-பலம் சர்க்கரைபோட்டு பாகுசெய்து அதில் ஷை சூரணத்தைப் போட்டு கூட நெய் தேன் சேர்த்து லேகியமாக கிளரி, 1-2-குண்டுமணி பிரமாணம் கொடுத்துவர நாபியிலிருக்கும் சீதளத்தைப் பிரித்து பசிதீபன முண்டாகும். பெரியவர்கள் 1-2-சுண்டைக்காய்ப் பிரமாணம் சாப்பிட்டுவர திரிதோஷத்தையும் நீக்கி பசிதீபனமுண்டாகும். பத்தியமில்லை.

வயிற்றில் எண்ணெய் சிக்கலுக்கு கியாழம்

வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக்கொண்டு சட்டியில் ஓமம் வெடிக்கவிட்டு, அதோடு வெற்றிலையும் போட்டு சாம்பலானபின் சலம்விட்டு காய்ச்சி வடித்து 2-3-வேளை கொடுக்கவும். வயிற்றில் சிக்குண்ட எண்ணெய்கள் ஜீரணித்து வெளியாகி சௌக்கியமுண்டாகும். இச்சாபத்தியம்.

வேறு

சுக்கு, மிளகு, குப்பைமேனிபில், ஷை வேர், முருங்கைவீர்க்கு ஓமம் இவைகளை நிதானமாய்நறுக்கிப்போட்டு கரிக்கி தண்ணீர்விட்டுகாய்ச்சி வடித்து

2-3-வேளை அருந்த எண்ணெய்ச்சிக்கலை நிவர்த்தியாக்கும். இச்சாபத்தியம்.

ஸ்திரீகள் வீட்டுதூர காலத்தில் வயிற்றுவலி கண்டால்

எருக்கப்பூ-5, வெள்ளைப்பூண்டு தோலா-5, கொஞ்சம் மிளகும் சேர்த்து அரைத்து உருட்டி இதேமாதிரி வீட்டுதூரமான 3-நாளும் கொடுக்க சௌக்கியமாகும். இச்சாபத்தியம்.

குழந்தைகளுக்கு பசி யில்லாவிட்டால்

சீரகத்தை இளவறுப்பாய் வறுத்து தூள் செய்து அதோடு கொஞ்சம் ஏலக்காய் போட்டு கியாழப்செய்து 3-வேளை கொடுக்க பசியுண்டாகும். பத்தியமில்லை.

குழந்தைகளுக்கு மாந்தம் சேராமலிருக்க காரப்பொடி

சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், இலவங்கம், ஏலம், குரோசானிஓமம், சீரகம், கருஞ்சீரகம், பரங்கிச்சக்கை, சித்தரத்தை, பேரரத்தை, அதிமதுரம், வால்மிளகு, கார்போகரிசி, வாய்விளங்கம் வகைக்கு விராகனிடை-1 இவையெல்லாம் இளவறுப்பாய் வறுத்து சூரணஞ் செய்துகொண்டு ஒருசிட்டிகை வெந்நீரிலாவது மூலைப்பாலிலாவது கொடுத்துவர குழந்தைகளுக்கு மாந்தம்அணுகாது. பத்தியமில்லை.

குழந்தைகளுக்கு சூட்டினால் ஜலதோஷம் பிடித்து அதோடு நுரைத்து வயிறு கழிந்தால்

கடுகுரோகணி, வாய்விளங்கம், சன்னராஷ்டகம், கோஷ்டம், அதிமதுரம், அக்ராகாரம், ஓமம், கருஞ்சீரகம், தும்பராஷ்டகம், லவங்கம், சுக்கு, திப்பிலி, பரங்கிச்சக்கை, சதகுப்பி வகைக்குபலம்-¼ இவையெல்லாம் இடித்து சூரணித்து வைத்துக் கொண்டு அதில் ஒருசிட்டிகை எடுத்து தாய்ப் பாலில்போட்டு பிழிந்து, அந்தச் சாற்றில் கோரோசனையாவது குங்குமப்பூவாவது கஸ்தூரியாவது கொஞ்சம் இழைத்து 3-வேளை கொடுக்க பூரணசுகமுண்டாகும். குழந்தைகளின் கபரோகத்திற்கு இது நல்ல சஞ்சீவியேயாகும். இச்சாபத்தியம்.

ஸ்திரீகள் பெரும்பாட்டுக்கு

ஒருபலம் அதிமதுரத்தை நறுக்கி கியாழமிட்டு சாப்பிடவேண்டியது. இதுபோல் 3-வேளை சாப்பிட சௌக்கியமாகும். இச்சாபத்தியம். உஷ்ணபதார்த்தம் ஆகாது.

ஜலுப்புக்கு கியாழம்

கால்படி வெந்நீரில் சுக்கு, சன்னராஷ்டகம், அதிமதுரம் வகைக்கு பலம் கால் நறுக்கிப்போட்டு 3-மணிநேரம் ஊரவைத்து வடிகட்டி 2-பாலடை வீதம் தினத்திற்கு 3-4-தடவை கொடுக்க சௌக்கியமாகும்.

பிரசவகாலத்தில் வயிறு நோகாமலிருக்க

ஆமணக்கெண்ணெய் படி-¼, அதில் பிரண்டை ஒருகணுவு பொடியாயறுத்து வெங்காயம்-2 அரிந்துப்போட்டு சிவக்கக்காய்ச்சி எடுத்துக்கொள்ளவும். தேகதிடமறிந்து 1-2-கரண்டியாக ஏழாமாதத்தில் ஒரு தடவையும் ஒன்பதாமாதத்தில் ஒருதடவையுமாக இரண்டு தடவை சாப்பிட்டால் பிரசவகாலத்தில் நோய்பாதை யில்லாமல் பிரசவமாகும்.

கெர்ப்ப ஸ்திரீகள்

மலஜல சிக்கலுக்குக் கியாழம்

வாய்விளங்கம், சோம்பு, கண்டத்திப்பிலி வெள்ளரிவிரை, மணத்தக்காளிவற்றல் வகைக்குப் பலம்-¼ இவையாவும் இடித்து நாலுமாகாணி ஜலம் விட்டு ஒருமாகாணியாக சுண்டக்காய்ச்சி வடிகட்டி கொடுக்க மல ஜலம் பிரவாகமாகி செளக்கிய முண்டாக்கும்.

பிள்ளை பெற்றவர்களுக்கு காயமருந்து

ஓமம்	பலம்	10
சுக்கு	,,	1
மிளகு	,,	1
திப்பிலி	,,	½
திப்பிலிமூலம்	,,	1
இலவங்கம்	,,	½
தாளிசபத்திரி	,,	½
லவங்கப்பட்டை	,,	½
சோம்பு	,,	1

பரங்கிச்சக்கை	பலம்	1
குருசானியோமம்	,,	½
வாய்விளங்கம்	,,	1/[illegible]
ஏலம்	,,	½
ஜாதிக்காய்	,,	¼
ஜாதிபத்திரி	,,	¼
வால்மிளகு	,,	¼
கருஞ்சீரகம்	,,	½
லவங்கபத்திரி	,,	½
அதிமதுரம்	,,	½
சீரகம்	,,	½
கசகசா	,,	2
அக்கிராகாரம்	விராகனிடை	2
பனைவெல்லம்	பலம்	25
நெய்	,,	20

இந்த சரக்குகளை தனித்தனி பொன்வரலாக வறுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து பனைவெல்லத்தை பாகுசெய்து அதில் சூரணத்தைப் போட்டு நெய்விட்டுக்கிண்டி லேகியமாகச் செய்துகொண்டு பிரசவகாலத்தில் பிரமாணப்படிசாப்பிட சௌக்கியமாகும்.

அள்ளுமாந்தப் பிட்டு

துளசி, ஆடாதோடை, காவாடுபுல், சங்கனிலை, முஷமுசுக்கை இவைகளை யிடித்து பிட்டுவைத்து சாறுபிழிந்து அதில் மாந்தமாத்திரை அல்லது கோரோசனைமாத்திரை இதுகளில் ஒன்று இரண்டு

சமயோசித தேகதிடமறிந்து 3-2-6-வேளை கொடுக்க நிவர்த்தியாகும். இச்சாபத்தியம்.

இளம்பிள்ளை வாய்வுக்கு நெய்

பசுநெய்	ஆழாக்கு	1
சித்தாமணக்கெண்ணை	,,	1
கடுகுரோகணி	பலம்	$\frac{1}{4}$
வாய்விளங்கம்	,,	$\frac{1}{4}$
ஓமம்	,,	$\frac{1}{4}$
தாளிசப்பத்திரி	,,	$\frac{1}{4}$
அதிமதுரம்	,,	$\frac{1}{4}$
சுக்கு	,,	$\frac{1}{4}$
மிளகு	,,	$\frac{1}{4}$
திப்பிலி	,,	$\frac{1}{4}$
கரிசலாங்கண்ணி சாறு	ஆழாக்கு	1
நெல்லிக்கந்தகம்	பலம்	$\frac{1}{4}$
பூரம்	,,	$\frac{1}{2}$
ஒருதலைப்பூண்டு	,,	2
கோழிமுட்டை		10

இதில் கரிசலாங்கண்ணி சாற்றில் உரித்த வெள்ளுள்ளியையும் கெந்தியையும் நெகிழவரைத்து நெய் எண்ணெயுடன் கூட்டி, அதில் கடைச்சரக்குகளை சன்னமாக இடித்துகலக்கி, முட்டைகளை கூட உறவாக்கி, சிறுதீயாக அடிபிடிக்காமல் எரித்து நெய் பக்குவப்பட்டு இறக்கும்போது பூரத்தை சன்னதாகசெய்து அதில் போட்டு இறக்கி வடித்து வைத்துக்கொள்ள வேண்டியது. பிள்ளைகள் தேக திடமறிந்து ஒன்று ஒன்றரை காசெடை சர்க்கரையி

லேனும் காப்பியிலேனும் அனுமானித்துக்கொடுக்க பதினெட்டு மாந்தங்களும் நிவர்த்தியாகும். இச்சா பத்தியம்.

குழந்தைகள் சகல தோஷத்திற்கும் கைகண்ட சாந்தி

குழந்தையின் சிரசில் வழியும்படி எண்ணெய் தேய்த்து உச்சி எண்ணெயை வழித்து முகத்தின் எதிரே விறட்டியில் நெருப்பு வைத்து அதில் வழித்து, அந்தப் புகைமுகத்தில் வீசும்படி செய்து அருப்பு தேய்த்து ஜலம் வார்த்து, உடனே தரை விளாம் என்னும் நரிவிளாம் இலையோடு அறுகம்புல் கஸ்தூரிமஞ்சள், கிச்சிலிக்கிழங்கு முதலியவை சேர்த்து, நலங்குசாந்தாக அரைத்து, கூர்தல்நடவி நலங்கிட்டு ஜலம் வார்த்து, ஒருபிடி நரிவிளாம் இலையைக் கியாழம்செய்து உடனே உள்ளுக்குக்கொடுக்கவும். மாலையில் ஒருவிரட்டியில் ஐந்துவர்னகோலம் போட்டு ஐந்துநிற சாத உருண்டை வைத்து, முக்கிளைக்கள்ளிநட்டு ஐந்தெண்ணெய் பந்தங்கொளுத்தி குழந்தைக்கு சுத்தி முக்கோட்டிசந்தில் வைத்து திரும்பிப்பாராமல் வரவும. இதுபோல் மூன்று ஸ்நானம் செய்துவைக்க சகல தோஷமும் நிவர்த்தியாகும்.

குழந்தைகளுக்கு தோஷ ரக்ஷை

குப்பைமேனி, விடத்தலை, சிறுகீரை, இந்த மூன்றுவேரும் குளிசமாடி கட்டவும். எந்த தோஷ

மும் அணுகாது. நிவர்த்தியாகும். ஆணுக்கு உச்சி குழிவிழும். பெண்ணுக்குக் கண் குழிவிழும்.

குழந்தைகளுக்கு ஸ்நானகால குளிகை

வேப்பங்கொழுந்து, கெச்சக்காயிலை, ஈயக் கொழுந்து, ஆடாதோடை, கண்டங்கத்திரி, நுணாயிலை, சதாபு இலை, ஓமம், மிளகு, பூண்டு, வசம்பு (சுட்டதுண்டு), நேர்வாளம் (சுத்திசெய்தது) இவை யாவும் தக்கபடி ஒன்றுசேர்த்து சுத்தஜலத்தில் அரைத்து மிளகுபிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். குழந்தைகளுக்கு ஸ்நானமாட்டி துடைத்தவுடனே வெந்நீரில் ஒருமாத்திரை கொடுக்க ஒருதரம் வாந்தியும், ஒருதரம் மலமும் உதையும். எந்த நோயும் வராமற்படி சரீரத்தைக் காப்பாற்றும். பத்தியமில்லை.

மூன்றுவயதிற்கு உள்பட்ட குழந்தைகள் சகல வியாதிக்கும் கூர்ம பஸ்ப மாத்திரை

ஆமையோடு பஸ்பம்	விராகனிடை	1
வால்மிளகு	,,	1
மிளகு	,,	1
ஏலம்	,,	1
திப்பிலி	,,	1
ஓமம்	,,	1
கோஷ்டம்	,,	1
சிறுநாகப்பூ	,,	1
நேர்வாளம் (சுத்தி செய்தது)	,,	½

இவையாவும் எலுமிச்சம்பழச் சாற்றில் ஒரு சாமம் மைபோலாட்டி பயறுபிரமாணம் மாத்திரை யுருட்டி நிழலி லுலர்த்தி வைத்துக்கொள்ளவும். தேனில், திப்பிலி சூரணத்தில் கொடுக்க ஜுரம் ஜன்னி முதலிடவை போம். பிஞ்சுகடுக்கா, சுக்கு, நிலாவரை கியாழத்தில் கொடுக்க மாந்தம் அஜீரணம் முதலியவை போம். இன்னும் தக்க அனுபானங்களில் கொடுக்க சகல வியாதியும் போம்.

பத்தியம்:—பால், கஞ்சி யாகும். பாலருந்தும் குழந்தையாயிருக்கில் தாய் இச்சாபத்தியம் இருக்க வேண்டும்.

மாந்த மாத்திரை

சுக்கு	விராகனிடை	1
மிளகு	,,	1
திப்பிலி	,,	1
ஆமையோடு	,,	1
ஓமம்	,,	1
கடுகுரோகணி	,,	1
வாய்விளங்கம்	,,	1
பெருங்காயம்	,,	1
இந்துப்பு	,,	1
நேர்வாளம் (சுத்தி செய்தது)	,,	1

செய்முறை:—ஆமையோட்டை ஓர் இரவு உத்தாமணிச்சாற்றில் ஊறவைத்து எடுத்து மற்ற சரக்குகளையும் ஒன்றுசேர்த்து உத்தாமணிசாற்றில் ஒரு ஜாமம் அரைத்து பயறு, மிளகு பிரமாணம் மாத்

திரை யுருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அநுபானம்:—அகத்திக்கீரை வதக்கிய சாறு அல்லது கலியாணமுறுக்கன் இலைச்சாற்றில் ஒரு மாத்திரை கொடுக்கவும். இப்படி 1-2-3-நாள் கொடுக்க நிவர்த்தியாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

சகல மாந்த குளிகை

ஒரு குத்து பூநாகத்தை (நாக்குப்பூச்சி) ஒரு கலயத்தில்போட்டு அதனளவு உப்பும்போட்டு ஒரு இரவுமுழுதும் வைத்து, மறுநாள் நாக்குப்பூச்சியை வெய்யலில் உலர்த்திக்கொண்டு அதற்கு சரியெடை ஓமம்சேர்த்து, அதோடு லவங்கம், லவங்கப்பட்டை ஜாதிக்காய் வகைக்கு பலம்-$\frac{1}{2}$, கோரோசனை விராகனிடை-$\frac{1}{2}$ எல்லாம் கல்வத்தில்போட்டு, இஞ்சிச் சாற்றில் ஒருஜாமமும், கறுப்பு வெற்றிலைச்சாற்றில் ஒருஜாமமும், நொச்சிச் சாற்றில் ஒருஜாமமும் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை யுருட்டி நிழலிலுலர்த்தி வைக்கவும். நொச்சிச்சாற்றில் ஒரு மாத்திரை கொடுக்க சகலமாந்தமும் தீரும். இச்சா பத்தியம்.

பதினெட்டு மாந்தங்களுக்கும் கியாழம்

நுணாயிலை, கிருஷ்ண துளசி, வேப்பன் ஈர்க்கு, வகைக்குப் பிடி ஒன்று. இந்த மூன்றும் மூன்று

அறுப்பு அருத்து சட்டியில்போட்டு பொன்வரலாக வறுத்துக் கொள்ளவும் முதலில் மிளகு சாம்பலாக்கிக்கொள்ளவும். இரண்டாவது மேற்படி தழைகளை போட்டு ஒரு பக்கமாக ஒதுக்கிக்கொண்டு, கருஞ்சீரகம் வெடிக்கவிட்டு, முக்கால்படி ஜலம்விட்டு ஆழாக்காக சுண்டக்காய்ச்சி 3-2-6-வேளைகொடுக்க சௌக்கியமாகும். நோய் கடினமாக இருந்தால் சமயோசிதப்படி மாந்தமாத்திரைகளில் ஒன்று அநுமானித்துக்கொடுக்கசௌக்கியமாகும்இச்சாபத்யம்.

குழந்தைகளுக்கு சகல மாந்த எண்ணெய்

விளக்கெண்ணெய்	படி	4
கற்றுழைமடல்		20
முசுமுசுக்கை	படி	½
நாய்துளசி	,,	½
வல்லாரை சாறு	,,	½
செருப்படை	,,	½
கரிசலாங்கண்ணி	,,	½
மணித்தக்காளி	,,	½
நல்லதுளசி	,,	½
நிலதுளசி	,,	½
தும்மட்டிக்காய்	,,	½
வெங்காயம்	,,	½

எண்ணெயும் சாறும் கலந்து அடுப்பேற்றிக் கொதிவரும்சமயத்தில் பூண்டுபலம்-2, சீரகம் பலம் 1, கடுகுரோகணி பலம்அரை, பூண்டுதவிர மற்றதை யிடித்து எண்ணெயில்போட்டு கடுகு திரண்ட பதத்தில் வட்டித்து கரண்டி வீதம் கொடுக்க மாந்தம் புறமாந்தம், இசிவுமாந்தம்,பொருமல்மாந்தம், சொருகு மாந்தம் முதலிய 18-ம் தீரும். கைகண்டது.

மேக வெள்ளைக்கு எண்ணெய்

கள்ளிச்சாறு, சங்கங்குப்பிச்சாறு, வெள்ளறுகு சாறு வகைக்குபடி-¼, பூரம் விராகனிடை-1, சித்தா மணக்கெண்ணெய் படி-அரை இவையாவும் ஒன்று சேர்த்து பதபாக காய்ச்சி 7-நாள் சாப்பிட பலவித மேகவெள்ளை தீரும். பத்தியம்: சுட்டபுளி வறுத்த உப்பு. 8-ம் நாள் ஒமம் தேய்த்து ஸ்நானம் செய்யவும். கைகண்டது.

சகல மேகத்திற்கு எண்ணெய்

ஆமணக்கெண்ணெய் தேங்காய்சிரட்டை படி 1 தும்மட்டிக்காய்-6 அல்லது 2-பூவரசங்காய்ச் சாறு கரிசலாங்கண்ணிச்சாறு, பொன்னுங்காணிச்சாறு, குப்பைமேனிச் சாறு, புங்கன்வேர்பால் வகைக்குப் படி முக்கால், காட்டு விராட்டியில் காய்ச்சி பதமாய் இறக்கி மேல்மூடி சாணிதடவி ரவியில் காயவைத்து எடுத்து கேழ்வரகு பானையில் ஒருமாதம் வைத்து எடுத்து தேக்கரண்டி அளவு 5-நாள் சாப்பிட சகல மேகமும் தீரும். இச்சாபத்கியம். கைகண்டது.

மேக எண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய்	படி	1½
கரிசலாங்கண்ணி	ஆழாக்கு	1
வல்லாரை	,,	1
பிரமி இலை	,,	1
மணித்தக்காளி	,,	1
கீழாநெல்லி	,,	1

இவைகளை சட்டியிலிட்டு 4-நாள் சூரியபுடமிட்டு 5-ம் நாளில் ஒருஜாதி விரகால் 2-ஜாமம் எரித்து

அதில் ஒன்னரை விராகனிடை பூரத்தை வுரைத்து 3-நாள் சாப்பிட அரையாப்பு கொறுக்கு வெள்ளை தீரும்.

பத்தியம்:—சுட்டபுளி, வறுத்தவுப்பு, அவரை முருங்கை, கத்திரி, வெண்டை, வாழை முதலிய பிஞ்சு. 6-ம் நாளில் ஓமம்தேய்த்து ஸ்நானம்செய்யவும் கைகண்டது.

குழந்தைகளுக்கு உரை மாத்திரை

ஜாதிக்காய்	பலம்	½
மாசிக்காய்	,,	½
வெட்டிவேர்	,,	½
கோரக்கிழங்கு	,,	½
ஷாகிரா	,,	½
பரங்கிச்சக்கை	,,	½
ஜாதிபத்திரி	,,	½
தாளிசபத்திரி	,,	½
சீரகம்	,,	½
பிஞ்சி கடுக்காய்	,,	½

இந்த பத்து சரக்கையும் வெயிலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ்செய்து நல்லஜலத்தில் அரைத்து சுண்டக்காய்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். குழந்தைகளுக்கு ஸ்நானஞ் செய்யும்போதும், ஒன்றுவிட்டு நாள் வேண்டும்போதும் ஒருமாத்திரை வெந்நீரில் கலந்து கொடுக்கவும். 1-வருஷத்திற்குமேல் 3-வருஷம் வரையிலும் இரண்டு மாத்திரை பிரயோகம் செய்யவும். இதனல் குழந்தைகளுக்கு மாந்தம், சளி முதலிய எந்த நோயும் வராமற்படி தடுக்கும். இதுவே சமயசஞ்சீவியாகும்.

குழந்தைகளுக்கு வாந்திகண்டால்

இலவங்கம், அதிவிடையம், திப்பிலி, மயிலிறகு இவை சமன்கொண்டு சுட்டு சாம்பலாக்கி தேனில் குழைத்து மிதமாக பிரயோகிக்க சௌக்கியமாகும்.

வீக்கத்திற்கு பத்து

ராகாசி மட்டையை வதக்கி சாறெடுத்துக் கொண்டு மிளகு பலம்-½, கடுகு பலம்-¼, பூண்டு பலம்-¼, இது மூன்றையும் மேற்படி சாறுவிட்டு அரைத்து கொதிக்கவைத்து நோய் வீக்கம் உள்ள பாகத்தில் 4-5 பத்துபோட வாதத்தாலுண்டான வீக்கம் பிடிப்பு திமிர் நீங்கும் கைகண்டது.

மேகவெள்ளைக்கு மருந்து

ஆடபிராக்கு, மோகபிராக்கு 2-ம் கொண்டுவந்து நெகிழஅரைத்து பசுமோரில்கலந்து தவணதிராவகம் சேர்த்துஉள்ளுக்குத்தர மேகத்தாலுண்டான நீர்சுருக்கு வெள்ளைரெண முதலியவைதீரும் கைகண்டது.

விஷநீர் இறங்க

சுரைவேர் கொண்டுவந்து வெள்ளையாக பஸ்பம்செய்து வெந்நீரில் 2-சிட்டிகைபோட்டு சாப்பிட நீர் இறங்கும். வீக்கம் வாடும். ரசபாஷாண வீறு தணியும். கைகண்டது.

மூன்றுமுறை காய்ச்சலுக்கு

கள்ளிக்கொழுந்து, சீரகம், மிளகு, இந்த மூன்றும் மைபோலரைத்து கெச்சக்காய்ப் பிரமாணம் உருண்டைசெய்து 3-நாள் உள்ளுக்குக் கொடுக்க மூன்றுநாள் காய்ச்சல் தீரும். கைகண்டது.

உ

கடவுள் துணை

ஆரிய அனுபோக ரகஸ்ய

வைத்திய அரிச்சுவடி

(இரண்டாம்பாகம்)

வியாதிவருங் காரணம்

ஆமப்பா மனிதர்செய்த கருமத் தாலே
அரகரா மேகமென்ற ராஜா வாலே
காமத்தால் விசனத்தால் பொசிப்பி னலே
கன்னியரை மிச்சமாய் புணர்வ தாலே
போமப்பா நடையாலே கொலைக ளாலே
பொழுதிரவு தெரியாத நித்ரை யாலே
நாமப்பா கண்ட கண்ட வியாதி வந்து
நலிவோர்க்கு கைமுறையை நன்றாய்கேளே. 1

கேளடா காமத்தால் கெட்டார் கோடி
கிளர்கின்ற கோடத்தால் கெட்டார் கோடி
நாளடா ஆணுவத்தால் கெட்டார் கோடி
நலமான தீயினல் மாண்டார் கோடி
வேளடா தோஷத்தால் வீழ்ந்தார் கோடி
வீணுன கொலைசெய்து செத்தார் கோடி
பாளடா நானென்ற கெருவந் தள்ளி
பண்பான வாகடத்தின் பயனைப் பாரே. 2

வாகடத்தின் பயனறியார் நாடி காணர் [வார்
வளர்கையைப் பிடித்திழுத்து வார்த்தைசொல்

ஆகடிய மாகவே நல்லோர் தம்மை [பார்
அசாத்தியநோய் வந்ததென்பார் ஐயோவென்
பேர்கிடக்கப் பேர்சொல்வார் வியாதி கட்கு [டார்
பிணிதீர்ப்போ மென்று சொல்வார் தீர்க்கமாட்.

ஓகோகோ வைத்தியர்நா னென்று சொல்வார்
ஒருக்காலும் மோட்சமில்லை நரகந் தானே. 3

சுகபேதி கியாழம்

சுக்கு	பலம்	¼
ரோஜாமொக்கு	,,	¼
பிஞ்சி கடுக்காய்	,,	¼
நிலாவாரை	,,	¼
கடுகுரோகணி	,,	1
இந்துப்பு	,,	¼
மிளகு	விராகனிடை	1
அதிமதுரம்	,,	1
திராக்ஷை	,,	1
ஏலம்	,,	1
சோம்பு	,,	1
கற்கண்டு	,,	1

இந்த பன்னிரண்டு சரக்குகளில் கற்கண்டும் இந்துப்பும் நீங்கலாக மற்ற சரக்குகளை நறுக்கி அரைபடி ஜலம்விட்டு ஆழாக்காக சுண்டக் காய்ச்சி வடித்து அதில் ஷை இந்துப்பும் கற்கண்டும்பொடித் துப்போட்டு கலக்கி சாப்பிட நான்கு ஐந்துதடவை இளைப்பு ஆயாசம் ஆசனக் கடுப்பில்லாமல் சுகமாக விரோசனமாகும். வாத பித்த சிலேத்தும திரி தோஷங்களையும் சமரசப்படுத்தி சரீரத்தை நல்ல

நிலையில்வைக்கும். இது நற்போன்றவர்க்கும் கர்ப்ப ஸ்திரீகளுக்கும் சுகமான முறையாகும்.

பத்தியம்:—மிளகுரசம், சூப்பு, கத்திரிபிஞ்சு முருங்கைபிஞ்சு பொரியல்முதலிய இச்சாபத்தியம்.

வேறு சுகபேதி கியாழம்

ரோஜாப்பூ, திராக்ஷைப்பழம்(விரைநீக்கினது) வாதுமைப்பருப்பு (மேல்தோல்நீக்கினது), சூரத்து நில ஆவாரை இவைகள்வகைக்கு விராகனிடைஅரை குல்கந்து விராகனிடை-2, இவைகளைப்போதுமான ஜலம்விட்டு நன்றாய்க் காய்ச்சின கஷாயத்தில் ஒன்றிரண்டு கரண்டி சித்தாமணக்கெண்ணெய் விட்டு சாப்பிட ஆயாசமின்றி நன்றாய் பேதியாகும்.

பத்தியம்:—பருப்புரசம், மிளகுரசம், சூப்பு முதலிய இச்சாபத்தியம். தாதுபுஷ்டி இரத்தவிருத்திற்காக மருந்து சாப்பிடுபவர்க்கு இதுநல்லமுறை.

வேறு சுகபேதி மூலிகை பதார்த்த கியாழம்

இரண்டு மூன்று பிடி விழுதியிலை அல்லது பிரமியிலை அல்லது முடக்கத்தான் இலை அல்லது வாதநாராயணனிலையை நன்றாயவித்த கஷாயத்தில் புளி, உப்பு,மிளகு, சீரகம், வெள்ளைப்பூண்டு,காயம் முதலியவைவையெல்லாம் போட்டு மிளகுநீர் செய்து வடித்து, மறுசட்டி வைத்து இரண்டு மூன்று கரண்டி சித்தாமணக்கெண்ணெய் விட்டு தாளிதம் செய்துசாப்பிடவாய்க்குருசியாயிருக்கும். நன்றாய்ப்

பேதியாகும். எவ்வளவு பேதியானாலும் ஆயாச மிராது.

பத்தியம்:—சூப்பு, மிளகுரசம் இது வாய்வு சம்பந்தமான் வியாதிகளுக்கு நல்லமுறை.

சுரத்திற்குக் கியாழம்

கோஷ்டம்	பலம்	$\frac{1}{4}$
மல்லி	,,	$\frac{1}{4}$
சுக்கு	,,	$\frac{1}{4}$
சீரகம்	,,	$\frac{1}{4}$
வில்வவேர்	,,	$\frac{1}{4}$
சித்தாமுட்டிவேர்	,,	$\frac{1}{4}$
நெற்பொரி	,,	$\frac{1}{4}$

இவையெல்லாம் தட்டிப்போட்டு ஒருபடி தண்ணீர்விட்டு அரைப்படியாக சுண்டக்காய்ச்சி வேளைக்கு வீசம்படியாக சாப்பிடவும்.

பத்தியம்:—கடும்பத்தியம் அதாவது நெய், இறைச்சி, புளி, கருவாடு நீக்கி, பருப்பு கத்திரிக்காய் வெந்நீர் கூட்டவும்.

சுரத்திற்கு பஞ்சமூல கியாழம்

கரிசலாங்கண்ணி, தூதுவேளை, நல்லதுளசி, நொச்சியிலை, ஆடாதோடை வகைக்குபிடி-1 இவை ஐந்தும் இடித்து பிட்டு அவியலாக அடுப்பில் வைக்கச்சே ஐந்து திப்பிலியைமுடித்து அதினுள்வைத்து வெந்ததின்பிறகு சாற்றைப் பிழிந்து அதில் திப்பிலியை உறைத்து 3-2-6-வேளை சாப்பிட சகல சுரமும் தீரும். கடும்பத்தியம்.

சகலபேதி கட்ட கியாழம்

எருமைச்சாணி பலம்-1, சீரகம் பலம் அரை, வசம்பு பலம்-¼, இந்த மூன்றும் நன்றாக பஸ்பம் செய்து அதில் ஒருபடி ஜலம்விட்டு அரைக்கால்படி ஆக சுண்டக்காய்ச்சி 3-வேளை கொடுக்க சகல பேதியும் கட்டும். கைகண்டது.

ஜன்னிசுரக் கியாழம்

சீமை நிலவேம்பு	பலம்	½
வட்டத்திருப்பி	,,	½
பேய்ப்புடல்	,,	½
ஆமையோடு	,,	½
பட்டுத்துணி	,,	½
வசம்பு	,,	½
பூநாகம்	,,	½
காடிகாரம்	விராகனிடை	½

இவைகளை சட்டியில் பஸ்பம் செய்துகொள்ள வேண்டியது. அதில் மிளகு, சுக்கு, பாஷா, கவசுபான் அளிசன், கண்டுபரங்கி, சன்னதும்ப ராஷ்டகம், அக்ராகாரம், அதிமதுரம் வகைக்கு பலம்-அரை, இளவறுப்பாக வறுத்து இடித்துப் போட்டு 2-படி ஜலம்விட்டு அரைபடியாக சுண்டக் காய்ச்சி 3-பாகம் செய்து அதோடு ஜன்னி சுரங் களுக்குரிய மாத்திரைகளை அனுமானித்தேனும் தனித்தேனும் 3-வேளை கொடுக்க மாந்தசுரம் சுரம் சன்னிசுரம் முதலானவை தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம். சுரம்நிற்கும்வரையிலும் பால் கஞ்சி காப்பி ரொட்டி அருந்தச்செய்வது உத்தமம். கைகண்டது.

3-4-ம் முறை சுரக்கியாழம்

சீமைநிலவேம்பு, விஷபத்திரி, வகைக்கு பலம் அரை, இதுகளை சாம்பலாக்கிக்கொண்டு அதில் மிளகு, சுக்கு, பானுஷா, கவுசுபான், அளிசன், கண்டுபரங்கி, சன்னதும்பரரஷ்டகம், அக்ராகாரம் வகைக்கு பலம்-1, இளவருப்பாக வருத்து இடித்து யாவும் 3-பாகமாக்கி ஒருபாகத்தை முக்கால்படி ஜலம்விட்டு அரைக்கால்படியாக சுண்டக்காய்ச்சி இரண்டுவேளை கொடுக்கவும். இம்மாதிரி 3-நாள் கொடுக்க சௌக்கியமாகும்.

பத்தியம்:—பால் கஞ்சி, புனல்பாகம், கைகண்டது.

பித்தவாத சுரக்கியாழம

கரிசிலாங்கண்ணி சாம்பலாக்கி, ஓமம் வெடிக்கவிட்டு 4-படி தண்ணீர்வார்த்து 1-படியாகக் காய்ச்சிக்கொண்டு மிளகு, பூண்டு, மோடி, லவங்கம், சன்னதும்பராஷ்டகம், கண்டுபரங்கி, தாளிசபத்திரி அக்ராகாரம், அதிமதுரம் வகைக்கு பலம் ஒன்றே அரைக்கால் எடுத்து இடித்து வஸ்திரகாயம்செய்து ஷை கியாழம்வார்த்து நெகிழ அரைத்து குளிகை செய்து 3-2-6-வேளை கொடுக்கவும்.

பத்தியம்:—சுட்டபுளி, வறுத்தவுப்பு, கத்திரி, முருங்கைப்பிஞ்சு, நெய், மிளகுநீர். கைகண்டது.

விடா சுரங்களுக்கு கியாழம்

கரிசலாங்கண்ணி சாம்பலாக்கி, ஓமம் வெடிக்க விட்டு 4-படி ஜலம் வார்த்து ஒருபடியாக காய்ச்சி அதில்,

ஓமம்	விராகனிடை	1
மிளகு	,,	1
பூண்டு	,,	½
மோடி	,,	½
வெங்கம்	,,	1
சன்னதும்பராஷ்டகம்	,,	1
தாளிசபத்திரி	,,	1
கரிமஞ்சள்	,,	1

இவை சிறுபதமாக வறுத்து இடித்துப்போட்டு பதமாக காய்ச்சி 3-நாள் 6-வேளை கொடுக்க எப்படிப்பட்ட விடாதசுரமும் விட்டுப்போகும். கை கண்டது.

தோஷ சன்னிகால நாவறட்சிக்கு கியாழம்

ஆலம்பழுப்பு		5
பூநாகம்	பலம்	½
மிளகு	,,	½
வசம்பு	,,	½
மயிலிறகு	,,	½
பட்டுத்துணி	,,	½
ஆமையோடு	,,	½

இவைகளை சாம்பல்செய்து அதில் சுக்கு, அதிமதுரம், அக்ராகாரம், சன்னராஷ்டகம் வகைக்குப்

பலம்-1 இடித்துப்போட்டு 2-படி ஜலம்விட்டு அரை படியாக காய்ச்சி 3-2-6-வேளை கொடுக்க சௌக்கிய மாகும். கைகண்டது.

பித்த எரிச்சலுக்கு கியாழம்

கொத்தமல்லி பலம்-1, மிளகு-11, இவ்விரண்டையும் இராத்திரி ஜலத்தில் ஊறவைத்து மறுநாள் காலையில் எடுத்து அதேஜலத்தில் அரைத்து அதனுடைய ரசமெடுத்து பொங்கவைத்து வடிகட்டி அதில் வெள்ளைச்சர்க்கரை ஏலம் பொடிசெய்து போட்டு சாப்பிடவும். இதுபோல் 3-2-6-வேளை சாப்பிட பித்தயெரிச்சல், மேகச்சூடு முதலியவைகள் தீரும். திரேகம் குளிர்ச்சியாகும். கைகண்டது.

சாரச் செந்தூரம்

சாரத்தை தூள்செய்து கோழிமுட்டை குடுக்கையில்போட்டு செம்மண் சீலைசெய்து சுண்ணாம்பு நீரில் நாலுஜாமம் எரிக்க செந்தூரமாகும். வாயு, சன்னி, சூலைவாய்வு, சூதகம்,கால்பிடிப்பு, கைபிடிப்புக்கு கொடுக்கத் தீரும்.

வைத்த மருந்திற்கு முறிவு

புல்லாமணக்கு இலை யென்பது மூன்று இலையே விட்டிருக்கும் கிழங்கு பல்லிமுட்டைபோலிருக்கும் பில்லாமணக்கு கிழங்கு கொண்டுவந்து வெய்யலிலுலர்த்திப் பொடிசெய்து நெய்யில் போட்டு சாப்பாட்டில் வார்க்க வைத்த இடுமருந்து முறியும்.

மேக இருமலுக்குச் சூரணம்

தூதுவேளைவேர் மணத்தக்காளிவேர் வில்வ வேர் இம்மூன்றும் சமனு இடித்து சூரணஞ் செய்து விளக்கெண்ணெயில் குழப்பிச் சாப்பிட மேக இரும்பல் தீரும்.

தலைவலிக்கு ஜன்னிக்கு பாம்பு கடிக்கு கலிக்கம்

வாகைசுக்கு திப்பிலி வகைக்கு வீசை-2, பசு வின் கோமயத்திலரைத்து குளிகைசெய்து விஷத் திற்கு சிறுநீரிலிடவும். தோஷத்திற்கு முலைப்பாலி லிடவும். ஜன்னிக்கு வெந்நீரிலிடவும். தலைவலி பிடரிவலிக்கு வெற்றிலை ரசத்திலிடவும்.

பித்தம் நாற்பதிற்கும் சீரகச் சூரணம்

ஐந்துபலம் நல்ல சீரகத்தை கல் மண் சக்க ளத்தி யில்லாமல் சுத்தம்செய்து ஒரு பீங்கானில் போட்டு அது மிதக்க எலுமிச்சம்பழச்சாறுவிட்டு ஓர் இரவுமுழுதும் ஊரவைத்து மறுநாள வெய்யலி லுணர்த்தவேண்டும். இதுபோல் முறையே இஞ்சிச் சாறு, பிரண்டைச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு,முடக் கத்தான்சாறு,முசுமுசுக்கைசாறு, பொன்னுங்காணி சாறு, கரிசலாங்கண்ணிச்சாறு, சந்தனக்கியாழம், கரும்புரசம் இவைகளில் ஒவ்வொருநாளும் ஒவ் வொரு ரசமாக ஊரவைத்து நன்றாக உலரவைத்து அதோடு சுக்கு மிளகு திப்பிலி ஏலம் தாளிசபத்திரி

நெற்பொறி அதிமதுரம் வில்வவேரோடு வகைக்குப் பலம் கால் கூட்டி இடித்து வஸ்திரகாயம்செய்து அதில் ஒருபலம் இந்துப்பும், இரண்டுபலம் சீனாகற் கண்டும் பொடித்துப்போட்டு, ஐந்துபலம் குல்கந் தில் மிசமித்து வைத்துக்கொண்டு காலை மாலை புன் னக்காய்பிரமாணம்சாப்பிட்டுவர பித்தம் மார்புகுலை எரிவு கைகால் குடைச்சல் பசியின்மை தலைமயக் கம் கண்ணெரிச்சல் சாலேஸ்வரம் மலச்சிக்கல் முத லியவை தீரும். இதை சிறுவர்கள்முதல் விருத்தர் கள் வரையில் எல்லோரும் சாப்பிடலாம். மெத்த வும் அநுபவமானது பத்தியமில்லை.

கவனிப்பு:—இதில் சொல்லிவரும் ஒவ்வொரு முறைகளும் இந்நூலாசிரியராகிய கோ.ப. வடிவேலு செட்டியார் அவர்களாலேயே கையாண்டு அநுபவம் பெற்ற முறைகளாகையால் ஒவ்வொருவரும் நம் பிக்கையோடு நம்பி செய்து பலனடைய வேண்டும் என்றே பரோபகாரமாக வெளியிட்டதாகும்.

வேறு சீரக சூரணம்

நாலுபலம் இஞ்சியை உரலில் இடித்து சாறு பிழிந்து அததுடன் எலுமிச்சம்பழரசம் சமமாய்ச் சேர்த்து அதில் நாலுபலம் நற்சீரகத்தை கல் மண் ணய்ந்து பொடியாயிடித்து மேல் ரசத்தில் ஓர்இரவு பகல் ஊரவைத்து எடுத்து மைபோலரைத்து அதோடு நாலுபலம் பசுவின்நெய்யும் நாலுபலம் சர்க்கரையும் கலந்து வைத்துக்கொண்டு காலையில் ஒரு தோலாயிடை சாப்பிடவும். ஒருதடவை மஞ்ச ளைப்போல் பேதியாகும். ஆகாவிட்டால் இரண்டு

தோலா நிலாவரையைக் கொண்டுவந்து மைபோல் இடித்து வஸ்திரகாயஞ்செய்து அத்துடன் கலந்து முன்போலவே சாப்பிட்டுவர நல்ல பித்தபேதியாகும். இவ்விதம் 5-அல்லது 7-நாள் காலை மாலை சாப்பிட பித்தத்தை நீக்கிக் குணமாக்கும் இந்த சூரண லேகியபாகத்தை லேகியங்களைப்போல அடுப்பில் வைத்துப் பிரட்டக்கூடாது. பிரட்டினல் பேதியாகாது.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

தீபனச் சூரணம்

சீறிய இருவரும் சிறந்த மூவரும்
கூறிய ஒருவரும் கொடிய காயமும்
ஆறுடன் கூடிய அஸ்வமே யாகமும்
நேருடன் சேர்ந்திடில் நெருப்ப தாகுமே.

செய்முறைப் பிரயோகம்

1 சுக்கு
2 மிளகு
3 திப்பிலி
4 சீரகம்
5 கருஞ்சீரகம்
6 வெண்காரம்
7 காயம்
8 ஓமம்

இந்த எட்டு சரக்கில் வெண்காரத்தையும் காயத்தையும் பொரித்து மற்ற சரக்கோடு சேர்த்து

இடித்து வஸ்திரகாயஞ் செய்துக்கொண்டு காலை மாலை திரிகடிபிரமாணம் 3-5-நாள் சாப்பிட மந்தம் புளியேப்பம் இரைச்சல் பித்தவாய்வு முதலியவைகள் தீரும். பசிதீபனமுண்டாகும். இச்சாபத்தியம்.

வஜ்ஜிரவல்லிச் சூரணம்

பிரண்டையை மோரில் அவித்து காரல்நீக்கி ரவியில் உலர்த்திய தூள் பலம்-10, சித்தரத்தை கிராம்பு சுக்கு வகைக்குப் பலம்-1, திப்பிலி பலம்-2 சூரணஞ்செய்துஒன்ருய்க்கலந்து திரிகடிபிரமாணம் தேனில் கலந்து சாப்பிட வாதத்தால் வயிற்றிரைச்சல் பொருமல் மந்தம் கிறுகிறுப்பு கைகால்குடைச்சல் பாச்சல் சந்துளைச்சல் நீர்பற்று சூலைநோய் தீரும்.

பத்தியம்:—துவரை நெய் பால் ஆட்டிறைச்சி புளியாரை மல்லி சுண்டைவற்றல் ஊடான்வற்றல் எலிச்செவி பாசிப்பயறு வெந்நீர் சாப்பிடவும். சீக்காய் வெந்நீர் ஸ்நானம் செய்யவும்.

கௌசிகர் குழம்பு

பெருங்காயம்	விராகனிடை	2½
இரசம்	,,	2½
கெந்தகம்	,,	2½
இலிங்கம்	,,	2½
மனோசிலை	விராகனிடை	2½
தாளகம்	,,	2½
கடுகுரோகணி	,,	2½
நாபி	,,	2½

வெண்காரம்	,,	$2\frac{1}{2}$
இந்துப்பு	,,	$2\frac{1}{2}$
திப்பிலி	,,	$2\frac{1}{2}$
காட்டுச்சீரகம்	,,	$2\frac{1}{2}$
கடுக்காய்	,,	$2\frac{1}{2}$
கடுகு	,,	$2\frac{1}{2}$
தென்னங்குரும்பி	,,	5
சுத்தி வாளம்	பலம்	5

செய்முறை:—வாளத்தை பாதி மணலில் வறுத்து மற்ற பாதியை எருமைச்சாணியில் வேகவைத்து முன் சரக்கெல்லாம் ஒன்றாகக் கல்வத்தில் போட்டு உத்தாமணிச்சாறு, தேங்காய்ப்பால், எலுமிச்சம்பழரசம் இவை தனித்தனி விட்டு 7-நாள் அரைத்து மாட்டுக்கொம்பு சிமிளில் பத்திரப்படுத்தவும். அரைத்த கல்வத்தில் மெல்லிய துணிபோட்டு பிரட்டி. திரியாக வுருட்டிக்கொண்டு, திரியின்மேல் எருக்கம்பால் விட்டுக் காயவைத்துக் கொள்ளவும். அந்த திரியை வேப்பெண்ணெயில் நனைத்து புகை பிடிக்க கபாலத்திலுள்ள இடிகள், மண்டைக் குடைச்சல், பீனிசம் பிசாசு முதலானது நீங்கும்.

உபயோகமும் அனுபானமும்

பேதிக்கு

சுக்கு கியாழத்தில் திடமறிந்து மிளகு பிரமாணம் சாப்பிடவும்.

சுரத்திற்கு

சுக்கு கியாழத்தில் சிறுபயறு பிரமாணம் 3-நாள் சாப்பிடவும்.

இரும்பலுக்கு

கடுக்காய் கியாழத்தில் மிளகு பிரமாணம் 5-நாள் சாப்பிடவும்.

நளிர் சுரத்திற்கு

மிளகுத்தூளில் மிளகுபிரமாணம் ?-நாள் சாப்பிடவும்.

இரத்த மூலத்திற்கு

பசும்பாலில் கடுகு பிரமாணம் சாப்பிடவும்.

சீழ்மூலத்திற்கு வரமூலத்திற்கு

எருமைப்பாலில் மிளகுபிரமாணம் 3-நாள் சாப்பிடவும்.

பாண்டு ரோகத்திற்கு

மெருபாலையிலைச் சாற்றில் மிளகு பிரமாணம் சாப்பிடத் தீரும்.

ஜன்னி தோஷத்திற்கு

தேன் அல்லது இஞ்சிச்சாற்றில் மிளகுபிரமாணம் 3-நாள் சாப்பிட குணமாகும்.

பருவுக்கு

உமிழ்நீரில் குழைத்து தடவ நீங்கும்.

விஷத்திற்கு

வெற்றிலைச்சாறு, உத்தாமணிச்சாறு, எருக்கு இலைச்சாறு இதுகளொன்றில் மிளகு பிரமாணம் 1-2-வேளை கொடுக்க நிவர்த்தியாகும்.

துடைவாழை அரையாப்புகட்டிக்கு

உமிழ்நீரில் குழைத்து மேலேபோட நீங்கும்.

விரைவாதத்திற்கு

வெள்ளாட்டுப்பாலில் மிளகு பிரமாணம் 3-5-நாள் கொடுக்க நீங்கும்.

வாய்வுகளுக்கு

சுக்குத் தூளில் குண்டுமணி பிரமாணம் சாப்பிடத் தீரும்.

இரத்தபேதிக்கு

மோரும் சாதம் சாப்பிடவேண்டியது. சுக்கு கியாழம் கொள்ள வேண்டியது.

பத்தியம்:—துவரம்பருப்பு, முருங்கைப்பிஞ்சு, வாழைக்கச்சல், நார்த்தம்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, தூதுவேளை, பசுநெய் முதலிய இச்சாபத்தியம். புகை கடுகு நல்லெண்ணெய் சுவுச்சி நீக்கவும். இச்சாபத்தியம். கைகண்டது.

வீர மெழுகு

வீரம்	விராகனிடை	1
பூரம்	,,	1
லிங்கம்	,,	1
சுக்கு	,,	1
ஏலம்	,,	1
லவங்கம்	,,	1
வாளம் (சுத்தி செய்தது)	,,	1

தேன்விட்டு அரைத்து சிமிளில் பத்திரப்படுத்தி இஞ்சிச்சாற்றில் நாவரட்சி ஜன்னி சுரத்திற்கும், தேனில் ஜலதோஷத்திற்கும், சுக்குத்தூளில் வாய்வு குத்தல் குடைச்சல் கைகால் பிடிப்பு இசுவும், நெய் சர்க்கரையில் பித்தம் காங்கையும் தீரும். இச்சா பத்தியம்.

பூரக் குழம்பு

பூரம்	விராகனிடை	1
ஏலம்	,,	1
திப்பிலி	,,	1
ஜாதிக்காய்	,,	1
மிளகு	,,	1
வாளம்	,,	10

தேன்விட்டரைத்து சுக்கு கியாழத்தில் சாப்பிட வெள்ளை, மேகம், கைகால் பிடிப்பு, பக்கசூலை வாய்வு தீரும். இச்சாபத்தியம்.

வீரக் குழம்பு

வீரம்	விராகனிடை	1
பூரம்	,,	1
இலிங்கம்	,,	1
இரசசெந்தூரம்	,,	1
திப்பிலி	,,	2½
கருஞ்சீரகம்	,,	2½
சுக்கு	,,	2½
மிளகு	,,	2½
அதிமதுரம்	,,	2½
வாளம் (சுத்தி செய்தது)	,,	5

தேன்விட்டரைத்து மெழுகுபதத்தில் சிமி ளில் பத்திரப்படுத்தி சுக்கில் அனுபானமாய்ச் சாப் பிட்டு, உடனே பனவெட்டு சாப்பிட சுரம், ஜன்னி வாய்வு முதலியவை தீரும். இச்சாபத்தியம்.

வாளக் குழம்பு

இலிங்கம்	விராகனிடை	1
படிகாரம்	,,	1
வாளம்	,,	4
ஆமணக்கு	,,	8

இவை நான்கும் நன்றாயரைத்து சிமிளி லடைத் துக்கொண்டு குண்டுமணி பிரமாணம் சுக்குகியாழத் தில் சாப்பிட 4-5-தடவை விரோசனமாகி திரி தோஷமும் நீங்கும். பேதி அதிகமானல் மோரும் சாதமும் சாப்பிடவும். இச்சாபத்தியம்.

இலிங்கக் குழம்பு

இலிங்கம்	விராகனிடை	4
வெண்காரம்	,,	2
பூரம்	,,	2
ஆமணக்கு	,,	4
வாளம்	,,	4

இவை ஐந்தும் ஒன்றுபட அரைத்து பத்திரப் படுத்தித் திரேகதிடமறிந்து குண்டுமணிபிரமாணம் சாப்பிட்டு ஜலமருந்த விரோசனமாகும். இச்சா பத்தியம்.

கையாந்தகரைக் குழம்பு

மிளகு	பலம்	1
கடுக்காய்	,,	2
திப்பிலி	,,	3
சுக்கு	,,	1
சடாமாசி	,,	½
கோஷ்டம்	,,	1
அக்ராகாரம்	,,	1
திப்பிலிமூலம்	,,	1
சோம்பு	,,	2
அதிமதுரம்	,,	1
தானிக்காய்	,,	2
நிலாவிரை	,,	2
வெங்காரம்	,,	2
நல்லவெல்லம்	வீசை	1
தேன்	பலம்	10

கையாந்தகரைச்சாறு குருணியில் வெல்லம் போட்டு பாகு பதத்தில் மேல்சரக்கை சூரணித்துப் போட்டுக் கிளரி வெடிகாரம் பொடித்துப் போட்டு தேன்விட்டுப் பிசைந்து கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், விஷபாகம்முதலியவை தீரும். இச்சாபத்தியம்.

கருங்குழம்பு

மிளகு	பலம்	2
வாளம்	,,	1
பூரம்	பலம்	அரை
கள்ளிப்பால்	பலம்	அரை

தேன் விட்டு அரைக்கவும்.

பூரக் குழம்பு

பூரம்	விராகனிடை	2
சுக்கு	,,	2
வால்மிளகு	,,	2
திப்பிலி	,,	2
ஜாதிக்காய்	,,	2
ஏலம்	,,	2
லவங்கம்	,,	2
வாளம	,,	2

நெய் அல்லது சித்தாமணக்கெண்ணெயில் அரைக்கவும்.

திரி ரக்ஷக் குழம்பு

வாளம்	பலம்	1
மிளகு	,,	2
உப்பு	,,	2

குன்மம் தீரும்.

ரத்னாதிக் குழம்பு

பூரம்	விராகனிடை	2
வெண்காரம்	,,	2
லிங்கம்	,,	4
வாளம்	,,	8

தேன்விட்டரைக்க முருங்கப்பூ நிறமாகும்.

இலிங்கக் குழம்பு

லிங்கம்	பலம்	1
பூரம்	,,	1

வெண்காரம்	,,	1
வாளம்	,,	2
ஆமணக்கு	,,	1

இவைகளை யரைத்து பணவிடை கொடுக்கவும்.

உபயோகமும் அனுபானமும்

சூலைக்கு

சித்திரமூல கியாழத்தில் கொடுத்தால் தீரும்.

சுரத்திற்கு

1. நொச்சிச்சாற்றில் கொடுத்தால் வாதசுரம் தீரும்.

2. கொடிவேலி, குப்பைமேனி, நத்தைச்சூரி இவைச்சார் படி அரைக்கால், எண்ணெய் படி ½, சேர்த்துக் காய்ச்சிவடித்த எண்ணெயில் கொடுக்கத் தீரும்.

3, கிராம்பு, எலம், அதிமதுரம், தனியா, தக்கோலம், சித்தரத்தை, கோஷ்டம் வகைக்குப் பலம் 1, நாலுபடி ஜலம்விட்டு வற்றவைத்த கியாழத்தில் கொள்ளத் தொந்தசுரம் தீரும்.

திமிர் வாய்வுக்கு

வேலிப்பருத்தி இலைச்சாற்றிலிடவும்.

அண்ட வாய்வுக்கு

கடுக்காய்ப்பூ விராகனிடை-1, கழற்பருப்பு விராகனிடை-1, வெள்ளுள்ளி விராகனிடை - 1, சுக்கு விராகனிடை-1, இவைகளை யரைத்துச் சலம்

விட்டுக் காய்ச்சி அரைக்கால்படி கியாழ மிறக்கிக் கொடுக்கத் தீரும்.

மேகசொரி விஷகரப்பானுக்கு

சங்கன் கியாழத்தில் கொடுக்கத் தீரும்.

வலி குன்மத்திற்கு

நிலாவரை கியாழத்தில் இடவும்.

ஊது காமாலைக்கு

செங்கடுக்காய், பூவரசன்பட்டைக் கியாழத்தி லிடத் தீரும்.

செய்யான்கடி, படர்தாமரை

சிறுசின்னி சாற்றில் கொடுக்கத் தீரும்.

கெர்ப்ப காங்கைக்கு

கரந்தைச் சாற்றி லிடவும்.

கிருமி பூச்சிக்கு

வெல்லத்தில் கொடுக்கத் தீரும்.

சீதபேதிக்கு

வெந்நீர் மோரில் சாப்பிடத் தீரும்.

பேதிக்கு

குளிர்ந்த ஜலத்தில் கொடுக்கவும்.

வலிப்பு ஜன்னிக்கு

வெற்றிலைச் சாற்றில் எள்ளளவு கலந்து கண்ணில் இடவும். (ஜாக்கிரதை)

எலி கடிக்கு

தைவேளையிலை ரசத்தில் சாப்பிடத் தீரும்.

விஷத்திற்கு

பழுப்பு எருக்கனிலை சாற்றிலிடத் தீரும்.

தும்மட்டிக்காய் குழம்பு

இந்துப்பு	விராகனிடை	2
பொட்லுப்பு	,,	2
வளையலுப்பு	,,	2
வெடியுப்பு	,,	2
நவாச்சாரம்	,,	2
சோத்துப்பு	பலம்	2
மூங்கிலுப்பு	,,	2
கல்லுப்பு	,,	2
கரியுப்பு	,,	2
தும்மட்டிக்காய்		5

மேல்தோல் தம்படி அகலம் அறுத்து உள் சோத்தை எடுத்து, உப்புகளை யரைத்து வாயில் ரொப்பி, காயிலிருக்கும் விரை நீக்கி சரக்கைப் போட்டு அறுத்த பில்லையை வைத்து மூடி மண்சிலை செய்து 3-4-வரட்டியில் அவிபுடம் வைத்து சீலை செய்து வெந்தபிறகு எடுத்து,

பெருங்காயம்	பலம்	¼
பூண்டு (உரித்தது)	,,	½
பூரம் (சுத்திசெய்தது)	விராகனிடை	2

குங்குமப்பூ	பலம்	¼
சாம்பிராணி	,,	¼
பனைவெல்லம்	,,	2

இவைகளையெல்லாம் கல்வத்திலிட்டு 1-ஜாமம் அரைத்து ஜாடியில் வைக்கவும். சுண்டக்காய்ப் பிரமாணம் கொடுக்க சூதகவாய்வு சூதககட்டி சூதக வலி தீரும். இச்சாபத்தியம். கைகண்டது.

வெள்ளை சிகப்பு பச்சை எண்ணெய்

நல்லெண்ணெய்	பலம்	5
சித்திரமூலவேர்பட்டை	,,	½
கிலக்கடம்பு ரசம்	,,	2
வெள்ளறுகு சாறு	,,	2
கூரெள்ளு	விராகனிடை	2
சுக்கு	,,	2

இவைகளெல்லாம் சேர்த்து பதமாகக் காய்ச்சி வடிகட்டி உச்சிக்கரண்டி வீதம் ஏழுநாள் சாப்பிட மேகம் 21-ம் தீரும். இச்சாபத்தியம். கைகண்டது.

சுகபேதி மாத்திரை

கோதுமைமாவு (நல்லஜலத்திலூரியது)	பலம்	1¼
பூரம் (குமரிப்பாலில் சுத்திசெய்தது)	,,	¼
நேர்வாளம் (சுத்தி செய்தது)	,,	¾
சுக்குச் சூரணம்	,,	½

இவைகளை 2-பலம் பன்னீர்விட்டரைத்து பயறு போல் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி சித்தப் படுத்திக் கொள்ளவும். குழந்தைகளுக்கு தாய் பாலிலும், பெரியவர்களுக்கு சுந்த சேம்பு திராக்ஷ்

கியாழத்திலும், தேகதிடமறிந்து 1-2-3-மாத்திரை கொடுக்க இளைப்பு ஆயாசம் இல்லாமல் மனக்களிப்புடன் பேதியாகும்.

பத்தியம்:—மிளகுரசம், சூப்பு முதலிய இச்சாபத்தியம்.

மேகநாதக் குளிகை

வெண்காரம்	பலம்	¼
லிங்கம்	,,	¼
சிவதைவேர்	,,	¼
வசம்பு	,,	¼
சுக்கு	,,	¼
மிளகு	,,	¼
திப்பிலி	,,	¼
இந்துப்பு	,,	¼
வாய்விளங்கம்	,,	¼
ஓமம்	,,	¼
பூரம் (சுத்திசெய்தது)	,,	¼
நேர்வாளம் (சுத்தி செய்தது)	,,	¼

இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றில் 4-ஜாமம் ஆட்டி மிளகுபிரமாணம் மாத்திரையுருட்டி நிழலில் உலர்த்தி சித்தப்படுத்திக் கொள்ளவும். சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் தேகதிடமறிந்து 1-2 மாத்திரை சுக்கு சோம்பு கியாழத்தில் கொடுக்க விரோசனமாகி திரிதோஷத்தையும் கண்டிக்கும். வாதசுரம் பித்தசுரம் சிலேத்துமசுரம் தொந்தசுரம் நீங்கும். செறியாமை மாந்தம் இசிவு கை கால் பிடிப்பு இடுப்புக்குடைச்சல் மார்நோய் ஓடுவாய்வு

முதலியவைகள் தீரும். அறிவாளிகள் அனுபானத்தின்மேல் கையாள சர்வ நோய்களும் தீரும். இது ஒரு சஞ்சீவி போன்றது. இச்சாபத்தியம். கைகண்டது

அன்னபேதி செந்தூரம்

ஐந்துபலம் அன்னபேதியும் ஐந்துபலம் வெடியுப்பும் ஒன்றுசேர்த்து உறவாகும்படி சன்னமாக தூள்செய்து ஓட்டில்போட்டு சிறுதீயாக எரித்துக்கொண்டு இரும்புக் கரண்டியால் பிறட்டி பிறட்டி கிளரிக்கொண்டே யிருந்தால் இரண்டும் உறவாகி உருகிகட்டி புகையடங்கி சிவந்த நிறமாக வரும். அப்போது இறக்கி அதோடு ஐந்துபலம் அன்னபேதியுங் கூட்டி மேனிச்சாற்றில் அரைத்து பில்லை தட்டி காயவைத்து ஓடுமூடி கவசம் செய்து மூன்று விரட்டியில் புடமிட பில்லைகள் இறுகி வெந்திருக்கும். அதை கல்வத்தில் போட்டு தூள்செய்து கோவைச்சாற்றில் அரைத்து பில்லைதட்டி காயவைத்து நான்கு விரட்டியில் புடமிட்டு எடுத்து அதோடு கால்பலம் பூரமும், கால்பலம் வீரமும் சேர்த்து கோவைசாற்றில் நாலுஜாமமாட்டி ஐந்து ஆறு விறட்டியில் புடமிட்டெடுத்து கல்வத்தில் போட்டு அரைக்க காரசாரமுடைய நல்ல செந்தூரமாகும் பிறகு புட்டியில் பத்திரப்படுத்திக்கொள்ளவும். இது ஒரு நல்ல சிறந்த முறையாகும்.

பிரமாணம்:—சிறியவர்களுக்கு அரை முதல் ஒரு அரிசி எடையும், பெரியவர்களுக்கு ஒன்று இரண்டு அரிசி எடை பிரமாணம் உபயோகப் படுத்தவும்.

தீரும் வியாதிகள்:—தக்க அனுபானத்துடன் தேனில் சாப்பிட சுரம் ஜன்னி விஷபேதி அஜீரண பேதி, நரம்புதளர்ச்சி, வாதசீதளம், புளியேப்பம், மாரடைப்பு, வாதரோகம், மேகரோகம், மாதாந்தருதுவின் உதிரச்சிக்கல், பலஹீனம் முதலியவைகள் தீரும். வெண்ணெயில் சாப்பிட மேகவெள்ளை தீரும். அறிவுடையோர்கள் அனுபானத்தினால் இன்னும் அநேக நோய்களையும் நிவர்த்திக்கலாம்

பத்தியம்:—வியாதிகளுக்குத்தக்கவாறு இச்சாபத்தியம்.

கவனிப்பு:—நமது அநேக தமிழ் வைத்தியர்கள் அன்னபேதியை ரொம்பவும் கேவல மருந்தாக கவனித்து அலக்ஷியமாக மதிக்கிறார்கள். அவ்வாறு நினைப்பது கேவலவிலையில் விற்பதினாலும், ஆராய்ச்சியின்மையாலும், கௌரவத்தினாலுமேயாம். அதனுடைய ஆராய்ச்சியும் அனுபவமும் அறிந்த அறிவுடையோர்கள் இதைவிட சுலபமான மருந்தில்லையென்றும், இதைவிட உயர்வான மருந்தில்லையென்றும், தொழிலாதிகளில் அவற்றின் குணகுணங்களும், லிங்கத்தின் குணகுணங்களும், பூரத்தின் குணகுணங்களும், வீரத்தின் குணகுணங்களும் இதனிடம் இருக்கிறதென்று தெரிந்து மதித்து மேல் மருந்துகளின் பிரயோகத்திற்கு பதிலாக இதையே பிரயோகித்து நோய்களைப் பரிகரிப்பார்கள்.

அன்னபேதியை எலுமிச்சம்பழச் சாற்றினாலும், பசரைச்சாற்றினாலும், கோவைச்சாற்றினா

லும், சிறுநீரினுலும் தனியாக செந்தூரித்து பிர யோகிக்கலாம். அநேகர் பிரயோகித்தும் வருகிறார் கள். ஆனல் மேற்சொன்ன இந்தமுறை பலமுறை களைக்காட்டிலும் விசேஷமான முறையென்று என் அனுபவத்தால் சொல்லுவதாகும்.

ஐவீரச் செந்தூரம்

லிங்கம்	பலம்	$\frac{1}{4}$
பூரம்	,,	$\frac{1}{4}$
வீரம்	,,	$\frac{1}{4}$
ரசம்	,,	$\frac{1}{4}$
நெல்லி கெந்தகம்	,,	$\frac{1}{4}$

செய்முறை:—அரை படி கல் சுண்ணாம்பைத் தாளித்து தெளியவைத்து அந்த தெளிநீரால் மேற் படி ஐந்து சரக்கையும் கல்வத்திலிட்டு ஆறவிட்டு நாலுஜாமம் அரைத்து புளியங்கொட்டைப் பிரமா ணம் பில்லைதட்டி, ரவியில் நன்றாக உலரவைத்து எடுத்து ஒருபடி பிடிக்கும்படியான சிறு தோண்டி யில் அரைபடி உப்பை கிட்டித்து அதன்மேல் கறுப்பு வெற்றிலையைப்பரப்பி அதன்மேல் மேற்படி பில்லைகளைப் பரப்பி அதன்மேல் கைம்மாறு வெற் றிலையைப் பரப்பி அதற்குமேல் மற்ற அரைப்படி உப்பையு மிடித்து ஓடுமூடி சீலைசெய்து எரித்து பக்குவமானதும் எடுத்து கல்வத்திற்போட்டு மெல் லிய தூளாகும்படி அரைக்க நல்ல செந்தூரமாகும். புட்டியில் பத்திரப்படுத்திக்கொள்ளவும்.

பிரயோகம்:—தேனில் கொடுக்க சுரம் ஜன்னி போம். பரங்கிச்சக்கை சூரணத்தில்கொடுக்க பாரிச

வாயுவும் மேகரோகமும்போம். இன்னும் தக்கஅனு பானங்களில் கொடுக்க அநேக வியாதிகள் நீங்கும்.

பிரமாணம்:—அரைமுதல் ஒன்றிரண்டு அரிசி எடை தேகதிடமறிந்து கொடுக்கவும்.

பத்தியம்:—இச்சாபத்தியம். கடூரமான நோயாில் கடும்பத்தியம் வைக்கவும்.

நோயணுகாவிதி

உலகினிடத்து திருவருட்செயலால் அரிய பிறவியாகிய மானிட தேகத்தை எடுத்திராநின்ற மக்கள் அனுசரிக்கின்ற பலவித நிலையினுங் கடத்தைக் காத்துக்கொள்ள வேண்டுவது அத்தியாவசியமாதலால், அதற்கு முக்கியமான காரியார்த்தங்களை இங்ஙனம் கூறவந்தமையால், முதலாவது நோய் அணுகா விதி என்பதை வெளிப்படுத்துகின்றது. அவை என்னவெனின்: மலஜலத்தையடக்காமலும், விந்துவை அதிகமாக நஷ்டப்படுத்தாமலும், உண்ணுமிடத்து நீரைக் காய்ச்சி, மோரை விளாவி, நெய்யை யுருக்கி உண்ணுதலுமாகிய தன்மையுள்ளவர்களின் நாமத்தை யுச்சரிப்பவர்கட்கும் பிணி விலகும்.

அன்றியும் பதார்த்தங்களின் குணத்தையும், அவைகளைப் புசிக்கவேண்டிய காலபேதங்களையும் பகுத்தறிந்து புசித்து அதனால் கிடைக்கிற சுகத்தை அனுபவிப்பவர்கள் பலவாகச் சொல்லப்பட்ட வியாதிகளைக் காணுதவர்களாய்ப் புத்திரர்களையும், மலையைப்போல் உறுதியுள்ள சரீரத்தையும், இவ்வுலகத்தைச் சிருஷ்டிக்கும் பிரமதேவனைப்போல

மிகுந்த ஆயுளையும்பெற்று பதினாலுலகத்தில் இருப்பவர்களும் கண்டுகளிக்கத்தக்கதாக வாழ்வார்கள். இவ்வாறே தெய்வப்புலமை திருவள்ளுவநாயனாரும் மருந்து என்னும் அதிகாரத்திற் கட்டளையிட்டனர். அவை என்னெனின்:- ஒருவன் முன்னுண்டது அற்றபடியை யறிந்து பின் மிகப்பசித்து உண்ணுமிடத்து மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்ணக்கடவன்.

மாறுகொள்ளாமையாவது:- உண்பவன் சரீர சுபாவத்தோடு மாறுகொள்ளாமையும், கால வியல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களாற்றமும் மாறுகொள்ளாமையுமாம் மாறுபாடில்லாத உணவுகளேயானாலும் மனம் வேண்டியமட்டில் உண்ணுமல் பிணிவாரா அளவினா லுண்ணல்வேண்டும். இவ்வாறு உண்பவன் உயிர் பிணிகளாற் றுன்பமுறுமல் சுகமுறும். ஒவ்வொருவரும் அதி உஷ்ண காலத்தில் விழித்துத் சுத்தோகமெனும் நீராகாரம் அல்லது நல்லஜலம் பிரமாணமாகப் பருகிப் பாதசாரியாய் நடந்து, மிதவசனம் வசனித்து, மாலை வெயிலை விரும்பி, பசும்பாலை இச்சித்து, எண்ணெய் நாலுதினத்துக்கு ஒருதரம் அப்பியங்கனஞ் செய்யும்போது வெந்நீரிற் குளித்து, பகற்காலத்திற் சையோகம் நித்திரை இவைசெய்யாமல் தன் வயதுக்கு மேம்பட்ட மாதரையும் இளவெயிலையும் இச்சியாமல், மல ஜலங்களை அடக்காமல், சுக்கிலத்தை அடுத்தடுத்து விடாமல், இடதுகைக் கீழாக படுத்து மூலரோகத்தை யுண்டாக்கும் பதார்த்தங்களையுண்ணுமல் புளித்து நீர்போலிருக்குந் தயிரைப்

பருகி முன்நாளில் சமைத்த கறி அமிர்தத்திற்கு ஒப்பானாலும் புசியாமல், பசித்தபோதே சாப்பிடுதல், அவையாவது தினம் இரண்டுதரம் உட்கொள்ளல், மாதரை மாதத்திற்கு ஒருதரஞ் சேர்ந்து, மிகுந்த தாகமுண்டாயினும் போஜன முடிவிலன்றி பின்பு ஜலபானஞ் செய்யாமல், கருணைக்கிழங்கு தவிர மற்ற கிழங்குகளைத்தின்னாமல் வாழை இளம் பிஞ்சைப்புசித்து, இரவிற் சாப்பிட்ட பின்பு குறு நடையாக நடந்து ஆறு மாதத்திற்கு ஒருதரம் வாந்தியாகும்படியாயும், நான்கு மாதத்திற்கு ஒரு தரம் பேதியாகும்படியாயும் மருந்துண்டு, ஒன்றரை மாதத்திற்கொருதரம் நசியஞ்செய்து, மாதத்திற்கு குறைந்தது இரண்டுவிசை சவளஞ்செய்து, மூன்று நாட்கொருதரம் கண்களுக்கு மையிட்டு, கஸ்தூரி முதலிய வாசனைத்திரவியங்களையும் புட்பங்களையும் நடுராத்திரியில் முகராமல், தூரஸ்திரீகள் நடக்கும் போது பறக்குந் தூசியும், ஆடு-கழுதை-துடப்பம் இவைகளால் உண்டாகும்தூசியும் மேலே படும்படி நெருங்காமல், இரவில் தீபத்தினிழல் மனிதர்நிழல் விருட்சநிழல் இவைகளிற் றங்காமல், போஜனம் ஜீரணிக்கும் காலத்தில் புணர்ச்சிசெய்யாமல், நித்திரை போஜனம் மலஜலம் புணர்ச்சி அழுக்குவஸ்திரம், சீப்பிட்டு சீவும்போது சிந்துகின்ற ரோமம் ஆகிய இவைகளை மாலைக்காலத்தில் நீக்கி, கன்றோடு கூடிய பசுவையும் தெய்வத்தையும் பிதுர்தேவதைகளையும் ஆசிரியரையும் அம் மாலைக்காலத்தில் பூசித்து, நகச்சலமும் சிகைச்சலமும்தெரிக்குமிடத்தில் நெருங்காமல் நடந்துவந்தால் நோயை முன்

னிட்டுவரும் எமனுக்கு இவனிடத்தில் வேலையில்லை யென்று நோயணுகாவிதியில் சொல்லியபடியால் ஒவ்வொருவரும் இதனை அவசியமாய் அனுபவிப்பதற்குக் கொண்டுவரவேண்டும்.

சரீரநிலை பெறுவதற்குக் காரணம்

சரீரமாகிய தேசம் தங்கியிருப்பதற்குக் காரணமாகிய வாதம் பித்தம் சிலேத்துமம் இரசதாது மாமிசதாது மேகதாது அஸ்திதாது மச்சைதாது சுக்கிலதாது மலம் மூத்திரம் என்னும் சரீராதி 12-சனின் வருத்தி சீரணங்களினால் பிறக்கானின்ற நோய்கள் முழுமையும் நீக்குதற்கு முக்கியமாய் வேண்டிய மருந்துகளோடு மேற்கண்ட ஜாடராக்கினியின் குணேதயத்தால் உணவுகளினின்றும் பிரிகின்ற அன்னரசத்தால் போஷிக்கப்பட்டு புஷ்டியாக்கிப் பூரிக்கப்பண்ணி பலத்தையுங் காந்தியையும் நிரந்தரமாக கொடுத்துக்கொண்டு உயிராகிய அரசனைவாழச்செய்தும், கர்ப்பவுற்பத்திக்கு காரணமாயும், தேகத்திற் காதரவுமாகிய சப்ததாதுக்களில் புருடர்கட்கு சுக்கில மென்றும், மாதர்கட்குச் சுரோணிதமென்றுஞ் சொல்லப்படும்.

இவ்விரண்டும் முறையே சிவம் சத்தி யென்றும் பெயர்பெற்று கர்ப்ப வுற்பத்திக்கும் ஆயுள் விருத்திக்கும் முக்கிய காரணமாக விருக்கின்றன. இவை அகாலபோஜனம் உஷ்ணபதார்த்தபக்ஷணம் பயம் துக்கம் வியாகூலம் சிந்தித்தல் மிகசந்தோஷம் அதிகோபம் மாரணஓமம் கருமலோபம் அதிதூலரோகம் அதிசாரரோகம் சீரணத்தாது விஷ

பேதங்களால் வருகின்ற பற்பலரோகம், காலத்தினும் அகாலத்தினும் காமநூல் விதிப்படி அநேக பந்தங்களுடன் செய்கின்ற சையோகம் அதாவது போகம் நீடித்தும் நிலைக்கவேண்டியதாய் லாகிரி சேர்ந்த ஔஷதாதிகளை சாப்பிட்டுச் செய்கின்ற சையோகம்.

மர்மஸ்தானக்கெடுதியென்னுமிவைகளினுலும் விர்த்தாப்பியத்தினுலும்நஷ்டப்படும் இவ்விதநஷ்டமுற்ற சுக்கில சுரோணிதத்தை யுடையவர்கள் பலவித அசாத்திய ரோகங்களை அனுபவிப்பதுமன்றி, சம்போகத்திற்கு இளைத்துக் குருவியைப்போல் புணர்ந்துப், வாயினுற் பேசி இச்சைதீர்த்தும், சந்தானவிருத்தி யில்லாமல் அற்ப ஆயுளையுடையவர்களாவார்கள். ஒருவேளை சந்தானவிருத்தி யிருந்தாலும் அதற்கு அற்பபலனும் ரோகவிருத்தியும் ஆயுள்குறைவும் உண்டாயிருக்கும். ஆகையால் பால் முதலிய மதுரவஸ்துக்களைக் கொண்டு சுக்கிலத்தையும், எண்ணெய் முதலிய பித்த வஸ்துக்களைக் கொண்டு சுரோணிதத்தையும் போஷிக்கவேண்டும்.

வைத்திய அரிச்சுவடி

1 - 2 - பாகங்கள் முற்றிற்று.

☞ இனி 3-4-பாகங்கள் அடங்கிய இரண்டாம் புத்தகத்தை கவனிக்கவும்.

உ

ஓம் பரப்பிரம்மணே நமஃ

ஆரிய அனுபோக ரகஸ்ய

வைத்திய அரிச்சுவடி

(3-4-பாகங்கள்)

இவை

தமிழ்ப் பண்டிதரும், நேடிவ் டாக்டரும்

பஞ்சபக்ஷி கணித ஜோதிடருமாகிய

கொரக்கோட்டை

ப. வடிவேலு செட்டியார் அவர்கள்

எழுதப்பட்டதை,

பூ. து. மாசிலாமணி முதலியாரிடம்

சர்வ சுதந்தரமும் பெற்று,

★

அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாசம் பிரஸில்

பதிப்பித்தது.

பதிப்புரிமை] 1951 [பெற்றது

24. தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

காபிரைட் அறிவிப்பு

இதனுல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:— இந்த "ஆரிய அனுபோக ரகஸ்ய வைத்திய அரிச்சுவடி" என்னும் நூலை, தமிழ்ப் பண்டிதரும், நேடிவ் டாக்டரும், பஞ்சபக்ஷி கணித ஜோதிடருமாகிய ஸ்ரீமான் - கொரக்கோட்டை. ப. வடிவேலுசெட்டியார் அவர்களால் எழுதி முடிவு பெற்றதை, சென்னை புரசை வல்லம் பங்காரு செட்டிவீதி 25-வது நெ. வீட்டிலிருக்கும் பூ. சு. துளசிங்கமுதலியார் குமாரர் பூ. து. மாசிலாமணி முதலியாருக்கு சகல சுதந்தரமும் கொடுத்துவிட்டமையால், அவர் தமது சுந்தர விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பித்து தன் பேரால் கவர்ன்மெண்டார் சட்டப்படி ரிஜிஸ்டர் காபிரைட் செய்யப்பட்டுத் தான் அனுபவித்து வந்ததை, ஷெ பூ. து. மாசிலாமணிமுதலியார் அவர்களிடம் அடியில் கையொப்பமிட்டுள்ள யான் கிரயத்திற்குப் பெற்று என்னால் அச்சிட்டு ரிஜிஸ்டர் காபிரைட் செய்து வெளியிட்டுள்ளேன். ஆகையால் இதனை என்னுடைய அனுமதியின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதைத் தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

இப்படிக்கு

அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாச அச்சுக்கூடம்

24. தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

கடவுள் துணை

ஆரிய அனுபோக ரகஸ்ய

வைத்திய அரிச்சுவடி

(மூன்றும்பாகம்)

அஷ்டவிதப் பரீக்ஷை

சமஸ்த ரோகங்களுக்கும் எட்டுவித பரீக்ஷை செய்யவேண்டும். அஃதாவது: நாடி, ஸ்பரிசம், தேகசுரூபம், சப்தம், கண், மூத்திரம், நாக்கு, மலம், இந்த எட்டும் வைத்தியரானோர் பார்க்கவேண்டும்.

நாடி

பெருவிரல் முதல் மூன்று விரல்களுக்குள்ளாக நெல்லுமணிப் பிரமாணமாக நாடி நடக்கும். அது சர்வாங்கமும் கூடியிருக்கும். கரமூலத்திலும் பாத மூலத்திலும் நாடி வசித்திருக்குமாகையால், ஸ்திரீகளுக்கு இடதுபக்கமும், புருஷர்களுக்கு வலது பக்கமும் பார்க்கவேண்டும்.

வாத பித்த நாடிகள்

முதல் விரலின் கீழ் நடக்கும் சிலேத்துமநாடி நடுவிரலின் கீழ் நடக்கும். அப்படிக்கில்லாமல் தாண்டி நடந்தால் ஆச்சரியநாடி என்றறிக.

வாத நாடி

வக்கிரகதியாய் நடக்கும். தவளைபோல, பாம்பு போல, சிறுபிள்ளை தொட்டில்போல, அட்டையைப்போல நடக்கும்.

பித்த நாடி

சபல தாதுவாக விருக்கும். இறகு விரித்த மயில்போல, அன்னப்பட்சிபோல, குதிரைபோல நடக்கும்.

சிலேத்தும நாடி

ஸ்திரகதியாய்க் கோழியைப்போல, ஊர்க் குருவியைப்போல, மீன்குத்தி பட்சியைப்போல நடக்கும்.

பித்த சிலேத்தும நாடி

முதல் பாம்புபோல நடந்து, உடனே தவளையைப்போல நடக்கும்.

வாத பித்த நாடி

முதலைபோல நடந்து, உடனே மயிலைப்போல நடக்கும்.

வாத சிலேத்தும நாடி

கோழியைப்போல நடந்து, உடனே அட்டையைப்போல நடக்கும்.

அஜீர்ண நாடி

யானை நடையைப்போல நடக்கும்.

தீபன நாடி

நித்திரை போகிற காகத்தைப்போல நடக்கும் ஸ்திரீசங்கம நாடியும் இந்தப்படியே நடக்கும்.

மலபந்த நாடி

அன்னத்தைப்போல நடக்கும்.

ஜன்னிபாத நாடி

விறகுசுமை மத்தியில் மூஞ்சூறு ஓடுவதுபோலவும், குடிலமாயும் சிதிலமாயும் மந்தமாயும் சூக்ஷமமாயும் நடக்கும்.

ஸ்பரிசம்

வாதரோகிக்குத் தேகம் கொஞ்சம் ஊஷ்ணமாயிருக்கும். பித்தரோகிக்கு அதி ஊஷ்ணமாயிருக்கும். இல்லாவிடில் சீதளமாயிருக்கும். சிலேத்தும ரோகிக்குக் கொஞ்சம் குளிர்ந்திருக்கும். தொந்த ரோகிக்கு நானுவிதமாயிருக்கும்.

தேகசுரூபம்

வாதரோகிக்கு சரீரங் கறுத்திருக்கும். பித்த ரோகிக்குத் தேகம் மஞ்சள்நிறமாயாவது சிவப்பாயாவதிருக்கும். சிலேத்தும ரோகிக்குத் தேகம் வெளுத்த நிறமாயிருக்கும். தொந்த ரோகிக்குத் தேகம் மிசிர வர்ணமாயிருக்கும். சன்னிரோகிக்கு விபரீதமாயிருக்கும்.

சப்தம்

வாதரோகிக்கு வார்த்தை மெதுவாயிருக்கும். பித்தரோகிக்கு வார்த்தை உரத்த தொனியோடிருக்

கும். சிலேத்துமரோகிக்கு வார்த்தை ஈனசுரமா யிருக்கும். தொந்தரோகிக்கு வார்த்தை வெகுவித மாயிருக்கும்.

நேத்திர பரீக்ஷை

வாதரோகிக்கு கண்கள் கறுத்திருக்கும், கொஞ்சம் நோயுண்டாயிருக்கும், கண்ணில் நீர்பாயும். பித்தரோகிக்கு மஞ்சள் நிறமாயாவது சிவந்தநிறமாயாவது இருக்கும். சிலேத்துமரோகிக்கு பீளை கட்டி வெளுத்திருக்கும். ஜன்னிபாதத்துக்கு சிவந்தாவது மஞ்சள் நிறமாயாவதிருக்கும். காமாலை ரோகிக்கு மஞ்சள் நிறமாயிருக்கும்.

மூத்திர பரீக்ஷை

வாதரோகிக்கு மூத்திரம் வெளுத்திருக்கும். பித்தரோகிக்கு மஞ்சளாகவும் சிவந்து மிருக்கும். சிலேத்தும ரோகிக்கு நுரைத்திருக்கும். தொந்த ரோகிக்கு மிசிரமாயிருக்கும். காமாலை ரோகிக்கு மஞ்சள் நிறமாயிருக்கும்.

நாக்கு பரீக்ஷை

வாதரோகிக்கு நாக்குவெடித்து முள்ளுண்டாய் கறுப்பு நிறமாயிருக்கும். பித்தரோகிக்கு மஞ்சளாயாவது சிவந்தாவதிருக்கும். சிலேத்துமரோகிக்கு நாக்கில் த்ரவமுண்டாய் வெளுத்திருக்கும். ஜன்னிபாதரோகிக்கு நாக்கில் முள்ளுண்டாய் த்ரவமில்லாதிருக்கும். தொந்தரோகிக்கு நாக்கு மிசிரவர்ணமாயிருக்கும்.

மல பரீக்ஷை

வாதரோகிக்கு மலம் கறுத்திருக்கும். பித்த ரோகிக்கு மஞ்சள் நிறமாயாவது சிவந்தநிறமாயா வது இருக்கும். சிலேத்தும ரோகிக்கு நுரைகட்டி வெளுத்திருக்கும். தொந்தரோகிக்கு மிசிரவர்ணமா யிருக்கும்.

கடைச்சரக்கு சுத்தி

பரங்கிச்சக்கை சிவதைவேர் அமுக்கனுங்கிழ ங்கு கெருடன்கிழங்கு முதலிய விஷச்சரக்குகளை மிதக்கப் பசும்பால்விட்டு பால் சுண்டுகிறவரையில் அவித்து எடுத்து உலர்த்திக்கொள்ளுவதே நல்ல சுத்தியாகும்.

நேர்வாள சுத்தி

நேர்வாளம்	பலம்	5
பசுஞ்சாணம்	,,	15
சுத்த ஜலம்	படி	1

இவையெல்லாம் ஒன்றாக ஓர் பாண்டத்திலிட்டுக் குழப்பி அடுப்பில் வைத்து குமுற காய்த்தெடுத்து சுத்த ஜலத்தில் அலம்பி, மேற்படி வாளத்தின்பேரி லிருக்கும் ஓடுகளையெல்லாம் உடைத்து பருப்புகளை யெல்லாம் ஒன்றாக்கி, அப்பருப்புகளி லிருக்கும் முளைகளையெல்லாம் போக்கி, ஓர் கலயத்தில் ஒரு ஆழாக்கு புழுங்கலரிசிநொய்யிட்டு அதற்குத்தகுந்த ஜலம்விட்டு மேற்படி வாளப்பருப்புகளையும் அதி லிட்டு ஒரு பிடி புளியமிலையையும் அதிற்போட்டு அடுப்பேற்றி நொய்ய வெந்தபிறகு இறக்கிச் சுத்த ஜலத்தில் அலம்பிப் பருப்பையெல்லாம் ஓர் சட்டியி

விட்டு நெய்யால் பொன்னிறமாக வறுத்து எடுத்து வைத்துக்கொள்ளவும். நல்ல சுத்தி.

நேர்வாள சுத்தி வேறு

எறுமைச்சாணி கொண்டுவந்து அதில் நேர் வாளத்தை ஒருநாள் முழுவதும் ஊரவைத்து அவித்து, நல்ல தண்ணீரில் கழுவிவிட்டு, ஓட்டை உடைத்து முளையாகிய நஞ்சுகளைப்போக்கி சோற்றுக்கற்றாழையைப் பிளந்து அதற்குள் வாளத்தை இரண்டுமணிநேரம் (ஐந்துநாழிகை) வைத்து நல்ல ஜலம்விட்டுக் கழுவி, மறுபடியும் அரிசி நொய்யை பசும்பாலில் விட்டு வாளத்தையும் கூட போட்டு அவித்து யெடுத்து நல்ல ஜலம்விட்டு கழுவி பிறகு வெய்யலில் உலர்த்தி மருந்துகளுடன் சேர்த்துக் கொள்ளவும். நல்ல சுத்தி.

உடம்புதேற காண்டாத்திரி லேகியம்

இஞ்சி அரைவீசை மேற்புரணையைச் சீவி மெல்லிசாய் குண்டுமணிப்பிரமாணம் ஒரேவிதமாய் அறுத்து நிழலில் உலர்த்தி,

மிளகு	பலம்	½
சடாமாஞ்சி	,,	½
எஷ்டிமதுக்கம்	,,	½
கோஷ்டம்	,,	½
மஞ்சிஷ்டி	,,	½
ஓமம்	,,	½
திப்பிலி	,,	½
சன்ன லவங்கப்பட்டை	,,	½
சுக்கு	,,	¾

வெட்டிவேர்	பலம்	$\frac{1}{4}$
குருவேர்	,,	$\frac{1}{4}$
கடுக்காய்	,,	$\frac{1}{4}$
நெல்லிப்பருப்பு	,,	$\frac{1}{4}$
தான்றிக்காய்	,,	$\frac{1}{4}$
சித்திரமூலம்	,,	$\frac{1}{4}$
வால்மிளகு	,,	$\frac{1}{4}$
கொத்தமல்லிவிரை	,,	$\frac{1}{4}$
இலவங்கப்பத்திரி	,,	$\frac{1}{4}$
சந்தனக்கட்டை	,,	$\frac{1}{4}$
கருங்காலிப்பட்டை	,,	$\frac{1}{4}$

இவைகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்து,

ஜாதிக்காய்	விராகனிடை	1
ஜாதிபத்திரி	,,	1
மூங்கிலுப்பு	,,	1
வெங்கம்	பலம்	$\frac{1}{2}$
கற்கண்டு	,,	$\frac{1}{2}$
திராக்ஷை	,,	$\frac{1}{2}$
பேரீச்சங்காய்	,,	$\frac{1}{2}$

இவைகளை கல்வத்தில் பொடிசெய்து,

தேன்	பலம்	3
நெய்	,,	6
சர்க்கரை	வீசை	$\frac{1}{2}$

மேலே அறுத்து உலர்த்தி வைத்திருக்கிற இஞ்சியை அடுப்பின்மீது இரும்பு வாணசட்டி வைத்து அதிற் போட்டு நெய்விட்டுப் பொன்னிறமாய் வறுத்து உரலில்போட்டுச் சூரணமாயிடித்து அதில்

மேற்படி சூரணங்களையும் சர்க்கரையுங் கூடக் கலந்து தேன்விட்டுகலக்கிமர்த்தனஞ்செய்து நெய்க் கலசத்தில்போட்டு வைத்துக்கொண்டு வேளைக்கு இரண்டு விராகனிடைப் பிரமாணம் சாப்பிடவேண் டும். இச்சாபத்தியம். புளியேப்பம் சோகை காமாலை காசம் சுவாசகாசம் அக்கினிமந்தம் குன் மம் லகு அக்கினிமந்தம் மலக்கட்டு முதலாகியவை நிவர்த்தியாகும். பலமுண்டாகும்.

உடம்புதேற தாளிசச் சூரணம்

தாளிசபத்திரி	பலம்	1
மிளகு	,,	1
செவ்வியம்	,,	1
சித்திரமூலம்	,,	1
திப்பிலி	,,	2
திப்பிலிமூலம்	,,	2
சுக்கு	,,	3
கோஷ்டம்	,,	3
வெட்டிவேர்	,,	3
ஏலம்	,,	¾
சன்ன லவங்கப்பட்டை	,,	¾
இலவங்கப்பத்திரி	,,	¾
நாககேசரம்	,,	¾
கடுக்காய்	,,	1
இலவங்கம்	,,	½

இவைகளை இடித்து வஸ்திரகாயஞ்செய்த சூர ணம் இரண்டுபங்கும், சர்க்கரை ஒருபங்கும் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். இரண்டுவேளையும்

இரண்டு விராகனிடைப் பிரமாணம் சாப்பிட்டுக் கொண்டு வரவேண்டும். இச்சாபத்தியம். பீனசு சுவாசகாசம் அரோசிகம் அக்கினிமந்தம் வமனம் அதிசாரம் குன்மம் பிலீகசாட்டியங்கள் ஆமயம் முதலிய ரோகங்கள் தீரும்.

ஆனந்த நெல்லிமுள்ளி லேகியம்

நெல்லிக்காய் பலம்-100 தூணி (4-மரக்கால்) நீர்விட்டு எட்டொன்ருய் காய்ச்சி அதில்,

திப்பிலி	பலம்	1
மிளகு	,,	1
சுக்கு	,,	1
ஓமம்	,,	1
கிராம்பு	,,	1
ஏலம்	,,	1
தக்கோலம்	,,	1
வாய்விளங்கம்	,,	1
குக்கில்	,,	1
மல்லி	,,	1
சீரகம்	,,	1
கூகைநீர்	,,	1
அதிமதுரம்	,,	1
மூலம்	,,	1
சர்க்கரை	,,	10
நெய்	படி	1

இவைகளை போட்டுக் கிளரி பாக்களவு அரை மண்டலம் சாப்பிட மேகச்சூடு அஸ்திசுரம் அழலை காந்தல் வாயு பொருமல் இருமல் ஈளை க்ஷயம் காசம் கிராணி மந்தந்தீரும் பத்தியமில்லை. கைகண்டது.

வல்லாரைக் கிருதம்

வல்லாரைச்சாறு படி-1, பொன்னாங்காணி பொடுதலை கவலப்பழம் வகைக்கு படி-½, பசுநெய் படி-2, பசும்பால் படி-2 அதில்,

ஜாதிக்காய்	கழஞ்சி	2
ஜாதிபத்திரி	,,	2
மாசிக்காய்	,,	2
கற்கடச்சிங்கி	,,	2
வால்மிளகு	,,	2
ஏலம்	,,	2
காட்டாத்திப்பூ	,,	2
கிராம்பு	,,	2
அதிமதுரம்	,,	2

இவைகளை பாலில் அரைத்து கலந்து எரித்து வடித்து கற்கண்டு பலம்-2 சேர்த்து கரண்டிவீதம் மண்டலம் சாப்பிட மேகம் தடிப்பு வெடிரணம் சீரவெப்பம் கிரந்தி பிரமியம் சீழ் கருங்குஷ்டம் குஷ்டம் சூலை மேகம் தழும்பு அஸ்திபுண் பீலி புத்து தீரும். இதில் ரஸபஸ்பம் வைத்து சாப்பிட்டால் கருமநோய் எல்லாம் தீரும்.

கண் வியாதிகளுக்கு அஞ்சனம்

இளநீர்	படி	1
முசுமுசுக்கைவேர்	விராகனிடை	2
கரிசலாங்காணி	,,	2
பொன்னாங்காணி	,,	2
வேப்பம் ஈர்க்கு	,,	2
கடுக்காய்	,,	2

தான்றிக்காய்	விராகனிடை	2
நெல்லிக்காய்	,,	2
அதிமதுரம்	,,	2
மரமஞ்சள்	,,	2
தேத்தான்கொட்டை	,,	2

இவைகளைக் கியாழம்செய்து ¼-படிக்கு சுண்ட வைத்து வடிகட்டி பதத்துக்கு காய்ச்சி அதில் ஓர் ஆழாக்கு தேன் ½-விராகனிடை பச்சைக்கற்பூரம் அரைத்துச் சேர்த்து கலந்துகொள்ளவும். சீசாவில் பத்திரப்படுத்தி குச்சியினுலாவது கையினுலாவது எடுத்து கொஞ்சமாக கண்ணிற்கு அஞ்சனம்போட கண்ணேய் தலைநோய் கண்ணெரிச்சல் நீர்ஊரல் கண்சிகப்பு பார்வைகுறைவு முதலான கண் வியாதிகள் சகலமும் நிவர்த்தியாகும்.

அஜீரணத்திற்கு தீபாக்கினிச் சூரணம்

திரிகடுகு அதாவது சுக்கு, மிளகு திப்பிலி ஓமம் இந்துப்பு இவைகளின் தூள் வகைக்கு பலம்-1, நற்சீரகத்தூள் பலம்-¾ இவைகளைச்சேர்த்து கலந்துக்கொள்ளவும். இவ்வரிய சூரணத்தை வாய்வு வயிற்றுப்பொருமல் பசியின்மை அஜீரணம் புளியேப்பம் இவைகளுக்கு கால் தோலா வரையில் கொடுக்கலாம்.

ஈளை இருமலுக்கு கபஹர கஷாயம்

கால்படி வெந்நீரில் திப்பிலி சன்னராஷ்டகம் அதிமதுரம் வகை 1-க்கு பலம்-¼, முசுமுசுக்கை தழை பலம்-½ போட்டு இரண்டுமணிநேரம் ஊற

வைத்து இலேசாக காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். அரைக்கால் ஆழாக்குவீதம் வேளை 1-க்கு கொடுக்க கபம் நீத்தனம்செய்து இருமல் சுகப்படும்.

தேள் விஷத்திற்கு மருந்து

வெள்ளெருக்கன்வேர்ப்பட்டை மூன்று விராகனிடை, மயில்துத்தம் (துருசு) $1\frac{1}{2}$-விராகனிடை, படிகாரம் $1\frac{1}{2}$-விராகனிடை, காடிகாரம் 1-விராகனிடை, குழாகெந்தம் 2-விராகனிடை ஆக ஐந்தும் உருக்கி ஆறினபிறகு மெல்லிய பொடிசெய்து கல்கார்க் புட்டியில் அடக்கம் செய்துக்கொண்டு சமயம நேரிடும்போது ஜலத்தில் மைதாள் 1-சிட்டிகை போட்டிழைத்து குழம்பாகச் செய்து கொட்டுவாயில் தடவி அனலில் காய்ச்ச உடனே சுகம் தரும்.

காது நோய்க்கு மருந்து

அபினி 25-குண்டுமணியிடை, எருக்கிலைச் சாறு 1-அவுன்ஸ் நன்றாய் மிஸ்ரமித்துக்கொண்டு 1-அவுன்ஸ் நல்லெண்ணெயில் கலந்து கரண்டியில் விட்டு சாறு சுண்டும்வரைக்கும் கொதிக்கவைத்து ஆறியபிறகு புட்டியில் அடக்கம் செய்துக்கொள்ளவும். காதுவலி காதுகுத்தல் காதில் சீழ்வடிதல் காதிரைச்சல் இவைகளுக்கு 5-6-துளிவிட்டு பஞ்சி அடைக்கவும். இரண்டுமூன்றுநாளையில் குணம்தரும்.

நாய் கடிக்கு, நரி கடிக்கு மருந்து

பைத்தியம் பிடித்த நாயேனும் சாதாரண நாயேனும், கிராமாந்தரங்களில் நரியேனும் கடித்

தால் உடனே கோழியின் (எச்சம்) மலம் எடுத்து கடிவாயில் கட்டிவிட்டால் இரண்டாம்நாள் ஷெ மருந்தின்பேரில் விஷம் நீலநிறமாக இருக்கும். அப்படியே விட்டுவிட்டால் தானாகவே விழுந்து விடும். மறுவாரம் ஆடுதீண்டாப்பாளை ஒரு பிடி, பிரமியிலை ஒருபிடி இரண்டும் அரைப்படி தண்ணீர் விட்டு கொதிக்கவைத்து அரைக்கால்படியாக சுண்டிய கியாழத்தை வடிகட்டி அரைப்பலம் இந்துப்பு தூள்செய்து போட்டு கலக்கிக் குடித்தால் நன்றாய் பேதியாகும் நாய் நரி கடிவிஷம் தீரும். கடித்த யிடத்தில் உடனே இரத்தத்தை வெளிப்படுத்துவது நன்மை தரும். இச்சாபத்தியம்.

வேறு முறை

எருக்கப்பால் வெல்லம் நல்லெண்ணெய் மூன்றும் அரைத்து லேகியம்போல் செய்து கடிவாயில் கட்டவும். அரைமுதல் முக்கால்தோலா வரைக்கும் நாயுருவி வேரை அரைத்து தேனில் குழைத்து உள்ளுக்கு சாப்பிடவும்.

பூச்சி வெட்டிற்கு மருந்து

அதாவது: மீசை கன்னம் முகவாய்க்கட்டை இவ்விடங்களில் கிருமி சேர்ந்துக்கொண்டு மயிர்களை கத்தரித்து விடுவதுண்டு. அந்தபிடம் மயிர் முளைக்காமல் அசங்கியமாக இருக்கும். அதற்கு நாகதாரிப்பூவை எடுத்து முள்ளெல்லாம் போக்கிவிட்டு ஷெ பூவை அந்தயிடத்தில் 3-நாள் தேய்த்தால் மயிர் சுத்தமாகமுளைக்கும். கிருமிகளெல்லாம் நாசமாகிவிடும்.

அண்டத் தைலம்

கோழிமுட்டை-20 தனியே தைலமிறக்கிக் கொள்ளவும். வசம்பு பலம் இரண்டே அரிக்கால் வேப்பெண்ணெயினுல் முடிகுதயிலமிறக்கிக்கொள்ளவும். முருங்கப்பட்டை மாவிலிங்கப்பட்டை நொச்சிப்பட்டை காட்டாமணக்குவேர்ப்பட்டை வெள்ளைக்காக்கட்டாம்வேர் இந்த ரசங்கள் வகைக்குப் பலம்-1 சேர்த்து, அதில் திப்பிலி கோஷ்டம் அக்கிராகாரம் திப்பிலிக்கட்டை வசம்பு சித்தரத்தை வகைக்கு விராகனிடை ஒன்றரை கொண்டு நெகிழ அரைத்து 8-பலம் வேப்பெண்ணெயில் கலந்து காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கிக்கொண்டு முன் சொன்ன இரண்டுவகை தைலங்களுடன் கால்பலம் பூனுகம் சாம்பலாக்கி ஒன்ருய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மதன கோலாகல வீரியவிருத்தி மாத்திரை

கொட்டை நீக்கிய பேரீச்சங்காய் பலம் பத்து ஒவ்வொன்றிலும் ஊமத்தன் விரைகளை நிரைத்து காய்களை நூலால்கட்டி பசும்பாலில் பிசைந்த கோதுமைமாவை காய்களுக்குக் கவசம்செய்து நிழலில் உலர்த்தி ஒருபடி தேங்காய்ப்பாலில் வெந்து சுண்டுமசமயம் காய்களை எடுத்து மாவு விரைகளை நீக்கி பேரீச்சங்காய்களை மாத்திரமெடுத்து நிழலில் உலர்த்தி, இத்துடன் வாலேரசம் நெல்லிக்காய் கெந்தி லவங்கம் அபினி ஜாபத்திரி வகைக்கு பண இடை-2, திப்பிலி பலம்-அரை, கெஞ்சா பலம் அரை, குங்குமப்பூ பச்சைக்கர்ப்பூரம் இசுப்கோல்

விரை பலகரைபஸ்பம் வகைக்கு காசிடை மூன்று இவைகளைத்தூள்செய்து முருங்கைப்பூ முருங்கைப் பிஞ்சு வகைக்குப் பலம்-2 யாவும் ஒன்றாகக்கூட்டி எருமைப்பாலினால் 4-ஜாமம் அரைத்து தேத்தான் கொட்டை பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தவும். இதில் காலை மாலை ஒருமாத்திரை சாப்பிட்டு பசும்பால் சாப்பிட நிகரற்ற வீரியவிருத் தியைக் கொடுக்கும். பலவிருத்தி பதார்த்தங்களாக புளிநீக்கி சாப்பிடவும்.

சோடா வுப்பு பஸ்பம்

சோடாமாவு பலம்-5 இதை கல்வத்தில்போட்டு முள்ளாங்கி ரசம்விட்டு அரைத்து பில்லைதட்டி காய வைத்து ஒருபுடமிடவும். பிறகு எடுத்து கல்வத்தில் போட்டு இஞ்சிரசம்விட்டு அரைத்து பில்லைசெய்து காயவைத்து புடமிடவும். மறுபடியும் இஞ்சிரசத் தில் புடமிட்டு எடுத்து பவுடர்செய்து வயிற்றுவலி குன்மம் வாய்வுகள் சேர்ந்த வியாதிகளுக்கு அனு பானமறிந்து கொடுக்கவும். கைகண்டது.

நித்தியானந்தத் தைலம்

நல்லெண்ணெய்	பலம்	40
ஆகாசதாமரையிலைச்சார்	,,	40
வெட்டிவேர்	,,	2½
கிச்சிலிக்கிழங்கு	,,	2½
வால்மிளகு	,,	2½
லவங்கப்பட்டை	,,	1¼
சுக்கு	,,	1¼
பரங்கிச்சக்கை	,,	2½

அபினி	ரூபாயிடை	¼
பசும்பால்	படி	¼
வெள்ளைமிளகு	பலம்	1
சந்தனக்கட்டை	,,	2

இவைகளை பதமாய்க் காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்துவர கபாலச்சூடு மஞ்சள்காமாலை முதலிய உஷ்ண பித்த சிரநோய்களை நீக்கி கண்களுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும். இச்சாபத்தியம். பகல் நித்திரை கூடாது.

குஷ்ட வியாதிக்கு மருந்து

அழுவணை இலைரசம்	ஆழாக்கு	1
பச்சைமஞ்சள்சாறு	,,	1
தேன்	,,	1

இந்த மூன்றையும் ஒருசீசாவில் அல்லது ஜாடியிலாவதுபோட்டு வெய்யலில் வைத்துக்கொண்டு வரவும். இவை சுண்டி கிருதம்போல் வருமளவும் வெய்யலிலேயே வைத்து தேனைப்போலிருந்தால் எடுத்துக்கொள்ளவும். வேளை ஒன்றுக்கு கரண்டி வீதம் இரண்டுவேளையாக மூன்றுநாள்கொடுக்கவும். இச்சாபத்தியம். மருந்தை சாப்பிட்டபிறகு அழுவணையின்பட்டை 2½-பலம் இடித்து கியாழமிட்டுப் பருந்து 2-வேளை சாப்பிடவும். கைகண்டது.

குஷ்டத்திற்கு கெந்தக பஸ்பம்

கெந்தகம்	பலம்	1
நல்லெண்ணெய்	,,	10
வெள்ளைவெங்காயம்	,,	5

இவை மூன்றையும் ஓர் எண்ணெய் பழகின பாத்திரத்தில் போட்டு தீயில்வைத்து வெங்காயம் வேகிறவரையில் வைத்து, வெந்தபிறகு இறக்கிக் கொள்ளவும். மேற்படி கெந்தகத்தை 5-பாகமாக்கி பச்சை வெள்ளறுகை அரைத்து சின்ன எலுமிச்சங் காய்ப்பிரமாணம் இருக்கவேண்டியது. அதில் கெந் தகத்தை வைத்து வியாதியஸ்தனை விழுங்கச்செய்ய வும். எண்ணெயை திரேக முழுமையும் பூசச்செய்ய வும். கைகண்டது.

வெள்ளைக்கும் இன்னும் மற்ற வியாதிக்கும் குஷ்ட மருந்து

வேப்பமரத்துப்பட்டையை இடித்து தூளாக்கி (பச்சையாகவே) பங்காளா வாழைப்பழம் சிலது போட்டு இடிக்க சாறு இரத்தம்போல் இறங்கும். அதில் சுமார் 2-அவுன்சு கொடுத்து நல்ல சாப்பாடு சாப்பிடவும். பசிதீபனம் உண்டு.

உப்புச் சுன்னம்

வெடியுப்பு	படி	1
சோத்துப்பு	,,	1
சுண்ணாம்புக்கல்	,,	1

இந்த மூன்றும் பெரிய பானையில்போட்டு ஜலம் விட்டு கழுவி கழுவி தெளிவையெடுத்து காய்ச்சி உப்பை எடுத்து அதை சுண்ணாம்பு ஜலத்தில் அரை த்து பில்லைதட்டி காயவைத்து புடமிடவும். ஆறி எடுக்க சுன்னமாகும். குன்மம் முதலிய வியாதி களுக்கு கொடுக்கவும்.

நீரடைப்பு சதையடைப்புக்கு

சாரம்	பலம்	1
வெடியுப்பு	,,	1

இரண்டையும் பொடிசெய்து ஒரு குடுவையில் போட்டு 4-5-வரட்டியில் புடமிட கட்டும். எடுத்து பவுடர் செய்து உபயோகப்படுத்தவும்.

வெள்ளிச் சுன்னம்

வெள்ளி பலம்-1, கழுதை கோமயத்தில் 20-தரம் காயவைத்துதோய்க்க வெள்ளி வெட்டையாய் விடும். அதையெடுத்து புளிப்பு மாதுளம்பழத்தில் நுழைத்து 20-வரட்டியில் புடமிடவும். இதுபோல் மூன்றுதரம் இந்த ரசத்திலேயே அரைத்து புடமிட சுன்னமாகும். சகல மேகங்களும் போகும்.

எலிகடிக்கு மருந்து

ஆகாசகெருடனகிழங்கை வெள்ளாட்டுப்பாலில் அரைத்து 3-நாள் கொடுக்கவும். உப்பு ஆகாது.

பிளவைக்கு கொறுக்குக்கும்

திருசு, கப்பமஞ்சள், வசம்பு, மிருதார்சிங்கி, கெந்தி அளவுபிரகாரம் கல்வத்தில் பொடித்து உபயோகிக்கவும். கைகண்டது

நெல்லிக்காய் தைலம்

நெல்லிக்காய்சாறு கரிசலாங்கண்ணிசாறு பசும்பால் நல்லெண்ணெய் வகைக்கு படி-கால் கலந்து

மெழுகுபதமாககாய்ச்சி 8-நாளைக்கு ஒருதரம் ஸ்நானம்செய்யவும். கிருகிருப்பு சாலேஸ்வரம் தீரும்.

வங்குக்கு மேல்பூச

இலந்தங்கொட்டை விராகனிடை-?, திப்பிலி விராகனிடை-2, மஞ்சள் விராகனிடை-4, தேன் விட்டரைத்து மேலேபூச நிவர்த்தியாகும்.

குஷ்டம் முதலான மேகவியாதிகளுக்கு

பள்ளந்தோண்டி அதில் செம்மண்கொட்டி அதில் 2-வீசை சேராங்கொட்டையைக் கொட்டி கலந்து தண்ணீர்தெளித்து மூடிவைக்கவும். 20-நாள் ஆனபிறகு திரும்பியும் கீழ்மேலாக்கித் தண்ணீர் தெளித்து அதில் கீரைதினுசுகள் விதைத்தால் அது கறுமையாய் விளையும். அந்தக் கீரையை பிரதிதினமும் நெய்யில் சமையல்செய்து 20-நாள் 40-நாள் உள்ளுக்குச் சாப்பிட நிவர்த்தியாகும்.

கண்டமாலைக்கு

கூரெள்ளெண்ணெய் பலம்-1, புங்கம்பால் பலம்-2, இரண்டையும் 7-நாள் உள்ளுக்குக் கொடுத்து உப்பில்லாத பத்தியம் வைக்க உடனே தீரும்.

பல்நோய் 32-க்கும் மருந்து

சோத்துப்பு பலம்-5 ஒரு புதிய குடுவையில் போட்டு புடமிட்டு எடுத்து பிறகு மேனிச்சாற்றில் அரைத்து பில்லைதட்டி காயவைத்து புடமிடவும். இத்துடன் அயப்பொடி துருசுதுத்தம் களிப்பாக்கு

கண்டங்கத்திரிவின்ரை கடுக்காய் கருஞ்சீரகம் கொட்டாங்கச்சிகரி, வாதுமைக்கொட்டைகரி யெல்லாம் சேர்த்து அரைத்துக்கொள்ளவும்.

(இதற்கு வாய் கொப்பளிக்க கியாழம்)

கடுக்காய் சுக்கங்காய் நீர்ப்பூலா கொடிவேலி எருக்கன்வேர் கியாழமிட்டுக் கொப்பளிக்கவும்.

நேத்திர வியாதி 96-க்கு தைலம்

பொன்னுங்காணி	படி	$\frac{1}{4}$
சிறுகீரைச்சாறு	,,	$\frac{1}{4}$
சீந்தில்சாறு	,,	$\frac{1}{4}$
நாரத்தம்பழச்சாறு	,,	$\frac{1}{4}$
பசும்பால்	,,	$\frac{1}{4}$
அதிமதுரம்	பலம்	2
கோரைக்கிழங்கு	,,	2
ஏலம்	,,	2
செண்பகப்பூ	,,	2
கிரும்பு	,,	2
எள்ளெண்ணெய்	படி	1

எல்லாம் கலந்து காய்ச்சிக்கொள்ளவும். ஸ்நானம் செய்யும் நாளில் புளி-மோர்-பால் தள்ளுபடி. சீக்காய் இலுப்பக்கட்டி தேய்த்துக்கொள்ளவும்.

பெண்கள் ருதுவாக மருந்து

மகிழம்விரையும் அழிஞ்சில்வேரும் அரைத்து பாலும் தேனும் கூடச்சேர்த்து ௬-நாள் உட்கொள்ள ருதுவாவார்கள்.

வேறு

நாய்வேளைவேர் பலம்-4 வெந்நீர்விட்டரைத்து ३-நாள் கொடுக்க பெண்கள் ருதுவாவார்கள்.

சகல மேகவெட்டை, பித்தவெட்டை, இரத்தக்ஷயம் இதற்கு மருந்து

வில்வயிலை வீசை-4 இடித்து பிட்டவித்துப் பிசைந்தெடுத்துக்கொண்டு சர்க்கரை சேர்-4 பாகு செய்துக்கொண்டு வெண்தாமரைக் கொட்டையின் பருப்பு பலம்-4, சீரகம் பலம்-2, தனியா பலம்-1, சூகைநீர் பலம்-1, திப்பிலி பலம்-2, தாளிசப்பத்திரி பலம்-1, லவங்கப்பத்திரி பலம்-1, ஷை பட்டை பலம்-1, நெற்பொரி பலம்-2 இடித்து வஸ்திரகாயம் செய்து ஷை பாகில் கலந்து நெய் தேன்விட்டு லேகியபதத்தில் இறக்கி சாப்பிட சகல வெட்டையும் தீரும். இச்சாபத்தியம்.

பேதி மெழுகு

வாளம் (சுத்திசெய்தது)	விராகனிடை	8
சொட்டைமுத்து	,,	4
வெண்காரம்	,,	2
லிங்கம்	,,	1

இது நான்கையும் சேர்த்து 4-ஜாமமாட்டி எடுத்துக்கொள்ளவும். குண்டுமணிப் பிரமாணம் வெல்லத்தில் சாப்பிடவும் பேதி அதிகமானல் மோர்சாதம் சாப்பிடவும். இச்சாபத்தியம்.

மலசுத்தி லேகியம்

நிலாவிரை பலம்-3, ரோஜாப்பூ பலம்-1½, திராக்ஷை பலம்-1, இந்துப்பு பலம்-1½, கடுகு ரோகிணி பலம்-½, பிஞ்சுகடுக்காய் பலம்-½, நெல்லி வத்தல் பலம்-¼, தானிக்காய் பலம்-½, வெட்டிவேர் பலம்-½, பரங்கிச்சக்கை பலம்-½, சிவதைவேர் பலம் அரை, சுக்கு வாய்விளங்கம் மிளகு ஓமம் வகைக்கு பலம்-1, திப்பிலி சோம்பு சிறுநாகப்பூ சீரகம் அதி மதுரம் ஏலம் லவங்கம் இலவங்கப்பட்டை அதிவிடயம் வகைக்கு பலம்-½ சிறுக வறுத்து சேர்க்கவும். நெய் தேன் போதுமானது சேர்த்துக் கிளரி புன்னைக்காய்ப் பிரமாணம் சாப்பிடவும்.

காமகேசரி குளிகை

அயம் வெள்ளி சுவர்னம் இவை தினுசுக்கு ஒரு கழஞ்சியெடுதது அதோடு பஞ்ச தாதுவாகிய ஜாதிக்காய் ஜாதிபத்திரி ஏலம் வால்மிளகு லவங்கம் இவைகளை தினுசுக்கு ஒரு கழஞ்சியெடுத்து இள வறுப்பாக வறுத்து கல்வத்திலிட்டு குமரிப்பாலில் காய்ச்சாமல் 4-ஜாமமரைத்து உளுந்துப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி மூங்கில் குழையில் வைத்துக்கொண்டு ஒருமண்டலம் காலை மாலை சாப்பிட்டு பசும்பால் அல்லது முலைப்பால் சாப்பிடவும். பத்தியமில்லை. இதனால் அதிக ஸ்திரீபோகத்தாலும் மணிக்குடலை பற்றி துளையிட்டு தூண்டில் முள்ளைப்போல்சேர்த்து இழுத்துக்கொண்டிருக்கிற வியாதியும், காமாக்கினி மேலிட்டு மூலாதாரத்தில் உஷ்ணத்தையுண்டாக்கும்வியாதியும், அப்படி உஷ்

ஷ்த்தை யுண்டாக்கும்போது உஷ்ணம் காற்று சேர்த்துக்கொண்டு மணிகருடலில் உலாவுதலால் இரண்டு விலாக்களையும் இழுத்துக்கொண்டு அன்ன ஆகாரங்களை இச்சையற்று எந்தவிதத்திலும் சக்தி யற்று போகும்படி செய்யும் வியாதியும், ரத்த சுக் கிலங்களை சாப்பிடும் வியாதியும், வாத பித்த காலங் களில் கைகால்களில் பலக்குறைவுண்டாகி மணிக் குடலின் காந்தலையும் உஷ்ணத்தையும் கொடுத்து சரிவர வேதனையடையுங்காலத்தில் வியாதி விருத்தி யடைந்து வெளிக்காட்டாமல் சரீரம் மெலிவுற்று கண்டகத்தில் புகைச்சல் காணும். சகல வியாதி களும் போய்விடும்.

தாதுபுஷ்டி லேகியம்

வாலைரசம்	கழஞ்சு	3
சாதிலிங்கம்	,,	1
வெண்காரம்	பலம்	½
கிராம்பு	,,	½
கஞ்சா	,,	½
முருங்கைவித்து	,,	½
சாதிக்காய்	,,	½
சாதிபத்திரி	,,	½
கோரைக்கிழங்கு	,,	½
அபினி	,,	½
பூனைக்காலிவித்து	,,	½
சாரப்பருப்பு	,,	½
பூமிச்சக்கரைக்கிழங்கு	,,	½

இவைகளையெல்லாம் பொடிசெய்து ஒரு தேங் காய்க்குள்ளே யடைத்து சாணமேற்றி 10-எருவில்

புடம்போட்டு சிரட்டை அதாவது கொட்டாங் கச்சி ஓடு நீக்கி முருங்கைப்பூச்சாற்றால் 3-சாமம் அரைத்து கழற்சிக்காய்ப்போல் மாத்திரைசெய்து ஒரு உருண்டை சர்க்கரையிலுண்டு பால் சாதம் சாப்பிடவும். இடுப்பு விடாது புளி நீக்கவும்.

கர்ப்பூர சலாசத்து பஸ்பம்

கர்ப்பூர சலாசத்து பலம்-10 ஒரே கட்டியாக வாங்கி கல்சுண்ணாம்பு மேலே பூசி காயவைத்து முழுப்புடம் போடவும். பிறகு அதை குமரிச்சாற் றால் ஒருசாமம்அரைத்து துட்டுப்பிரமாணம் பில்லை தட்டி காயவைத்து ஓட்டிலிட்டு சீலைசெய்து புடம் போடவும். மறுபடியும் ஒருபுடபோட்டு எடுத்துக் கொள்ளவும். பணவிடை சர்க்கரை தேன் நெய் முலைப்பால் வெந்நீர் இதுகளில 5-7-10 நாள் கொடுக்க மேகங்கள நீர்ச்சுருக்கு நீர்கட்டு நீர டைப்பு மேகசுரங்கள் வாதரோகங்கள் பித்தம் இரு மல் மார்பின்கபங்கள் கல்லடைப்பு இதுகள் தீரும். இச்சாபத்தியம்.

குன்மத்திற்கு உப்புச்சுன்னம்

சோடா உப்பு பலம்-2 வாங்கிவந்து சிறிது தும்மட்டிக்காய் ரசமெடுத்து கல்வத்திட்டு 2-நாள் அரைத்து பில்லைதட்டி வெயிலில் வைத்து ஓட்டி லிட்டு சீலைமண்செய்து 25-வரட்டியில் புடமிடவும். இதுபோல் மேற்படி ரசத்தில் 2-3 புடமிடவும் கடுங்காரமாகும். இதில் ஒரு விராகனிடை சுன்ன மெடுத்து அரைப்படிமோரில் ஒருபுட்டியில்போட்டு

குலுக்கி ஒருமணி நேரத்திற்கு ஒருதரம் சாப்பிடவும். கொஞ்சம் கொஞ்சமாக காலைமுதல் மாலைவரையில் சாப்பிடவேண்டும். தேன் அல்லது நெய்யில் அரிசியிடை கொடுக்கலாம். சுரத்திற்கு நெய்தேனில் கொடுக்கலாம். இச்சாபத்தியம்.

நவநீத மெழுகு

சாதிலிங்கம் வாளம் இந்துப்பு வெண்காரம் காந்தம் வீரம் பூரம் ரசசெந்தூரம் சித்தாமணக்கின் பருப்பு சமனிடையாக வரிசைக்கிரமமாக 4-ஜாமம் அரைத்து கொம்புச்சிமிளில் வைத்துக்கொள்ளவும். தேகத்திற்குத் தக்கபடி குன்றிமணிப்பிரமாணம் பனைவெல்லத்திற் கொடுக்கவும். விபாதிக்குத் தக்கபடி 3-5-7-நாள் கொடுக்க வாயு மலபந்தம் சக்நி குன்மம் வீக்கம் பாரிசவாய்வு நீராம்பல் சூலை-18, குன்மம்-8, பிளவை மேகசூலை இருமல் காசம் கக்கல் விக்கல் திமிர்வாய்வு காதில்சூலை முடப்பன் வண்டுகடி சில விஷங்கள் அஷ்டபீலிகைசுரம 64-ம் போம் இச்சாபத்தியம்.

ரசக் களங்கு

ரசம்-1, பாஷாணம்-1, அப்பளாகாரம்-1 புளி-$\frac{3}{4}$, கரிசலாங்கண்ணி-$\frac{1}{2}$ ஆக ஐந்தும் கூட்டி அரைத்து சிறுதுடுவையில்வைத்து வாயிறுக அரையணு அல்லது பைசாவால் மூடி பலமாக சீலைமண் செய்து 7-வரட்டியில் புடமிட உருகிகளங்காகும் கைகண்டது.

காப்பசஞ்சீவி எண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய் படி ஒன்றில் தைவேளைச்சாறு ஏரண்டயிலைச்சாறு விழுதிச்சாறு நிலாவாரைக்கியாழம் வகைக்குப் படி-¼ சேர்த்து, அதில் மஞ்சள் கடுக்காய் இந்துப்பு வெண்காயம் வெள்ளைபூண்டு கடுகு வகைக்குப்பலம் ஒன்று இடித்துசேர்த்து கள்ளிப்பால் வீசம்படி சேர்த்து ஒன்ருய்க் கலக்கி மெழுகுபதமாய் காய்ச்சி வடித்து புட்டியில் பத்திரப்படுத்தி, உச்சிக்கரண்டி நிறை மூன்றுநாள் கொடுத்து மறுபத்தியமிருக்க சூதக வாயு குத்து பக்கசூலை வயற்றுவலி முதலியவைகள் தீர்ந்து கர்ப்பமுண்டாகும். பத்தியம் உப்பாகாது. முடிவில் ஒமம் தேய்த்து வெந்நீர் ஸ்நானம்செய்யவும்.

பத்தியக்கிரமம்

புஷ்பம் சந்தனம் கற்பூரம் தாம்பூலம் சிகப்பு வஸ்திரம் நெய் வெல்லம் நல்லெண்ணெய் நற்போஜனம் கச்சைப்பட்டை போட்டகட்டில் புதுவஸ்திரம் காற்றடிக்குமிடம் ஸ்திரீகளின் ஸ்பரிசம் இவைகளை நீக்கவேண்டும்.

அதிசார ஜாட்டிய முள்ளோர்க்கும், கர்ப்பஸ்திரீகளுக்கும், வயதுசென்றவர்களுக்கும், குழந்தைகளுக்கும், இந்திரிய நஷ்டமுள்ளபேர்களுக்கும், வழிநடந்தபேர்களுக்கும், நேத்திரரோகிகளுக்கும், க்ஷயரோகிகளுக்கும், கிராணிரோகிகளுக்கும் லக்கணங் கூடாது.

பத்தியஞ் செய்விக்க வேண்டிய காலம்

வாதரோகிக்கு	மூன்றும் சாமத்தில்
பித்தரோகிக்கு	முதல் சாமத்தில்
சிலேத்துமரோகிக்கு	2-ம் சாமத்தில்

சுரம் அதிசாரம் கிராணி விஷூசி முதலிய வியாதியஸ்தர்களுக்கு

பார்லி சப்பரிசி கோதுமை நெல்பொரி முதலான லகுபதார்த்தங்களை கஞ்சியாக செய்து குடிக்கவேண்டும்.

குஷ்டம் சர்மவியாதி கரிமேகம் பிளவைகள் ரணங்கள் பரங்கிவியாதி நீர்கோவை ஆமவாதம் முதலான வியாதியஸ்தர்களுக்கு

புளியை நீக்கவேண்டிய தாவஸ்யகம். அவசியமாகயிருந்தால் எலுமிச்சம்பழரசம் சேர்த்துக் கொள்ளலாம். வியாதி கடுமையாக இருந்தால் பகல் ஒருவேளை சாதம் சாப்பிட்டு ராத்திரியில் கோதுமை ரொட்டியை கறிகளோடும் பால் சர்க்கரையோடும சாப்பிடுவது நலம்.

ஸ்வப்பனஸ்கலிதம் சுக்கிலமேகம் பிரமேகம் முதலான வியாதிகளுக்கு

காப்பிபொடிக்கு பதிலாக ஆவாரம்பூ நன்னாரி வேர் தனியா இவை ஒன்றாகவாவது பிரத்தியேகமாயாவது சூரணித்து வேளைக்கு ஒருதோலா காப்பி செய்து குடிக்கலாம். அல்லது சாலாமிசிரியைப் பொடிசெய்து தண்ணீரில் ஊரவைத்து பாதம் பாலோடு பாயசம்போல் காய்ச்சி காப்பிக்கு பதி

லாக குடித்தால் வியாதியைக் கண்டித்து தேகத்திற்கு பலத்தைக் கொடுக்கும். அதன்றி, வெண்டக்காய் கலியாணபூசினிக்காய் கற்கண்டு பிஸ்தா பருப்பு சாரைப்பருப்பு திராக்ஷை பால் மோர் முதலான பதார்த்தங்களை முக்கியமாக சாப்பிட வேண்டும்.

க்ஷயம் காசம் ஸ்வாசம்-(இரைப்பு) இருமல் முதலான வியாதியஸ்தாகளுக்கு

வெள்ளாட்டுப்பால் வெள்ளாட்டுக்கறி உப்பு கண்டம் திராக்ஷை கமலா சாத்துக்கொடி முதலிய பழங்கள், பக்ஷிகள் மாமிசம், கண்டங்கத்திரிக்காய் தூதுவேளைகீரை தேன் சுண்டக்காய் லகுவானகாய் கறிகள் முதலானவைகளை முக்கியமாக சாப்பிட வேண்டும்.

சுக்கிலநஷ்டம் தாதுநஷ்டம் நரம்புதளர்ச்சி பலயீனம் முதலிய வியாதியஸ்தர்களுக்கு

கோதுமை உளுந்து பால் நெய் கற்கண்டு பாதம் ஹல்வா அக்ரூட் பிஸ்தா பாதம் ஆட்டுக்கறி சூப்புகள் காட்டுபன்றிமாமிசம் வெண்டக்காய் கோழி முட்டை இவைகளை முக்கியமாக சாப்பிட வேண்டும்.

இரத்தமூலம் முளைமூலம் ஆசனக்கடுப்பு முதலிய வியாதியஸ்தர்களுக்கு

மிளகாய் காரத்திற்கு பதிலாக மிளகுகாரம் சேர்த்துககொள்வது நலம், புளிப்பு குறைக்கவேண்டும். துத்திக்கீரை காசினிச்கீரை பாலைகீரை மணத்

தக்காளிகீரை விழுதியிலை முடக்கத்தான்கீரை கருணைக்கிழங்கு பழங்கள் பால் தயிர் மோர் நெய் அக்ரூட் கடுக்காய் இந்துப்பு முதலானவைகளை முக்கியமாக சாப்பிடவேண்டும்.

மதுமேகம் ஹஸ்திமேகம் முதலிய வியாதியஸ்தர்களுக்கு

வெல்லம் சர்க்கரை கற்கண்டு முதலான தித்திப்பு பதார்த்தங்கள் சாப்பிடக்கூடாது. அதற்குப் பதில் உலர்ந்ததிராக்ஷை தண்ணீரில் நசுக்கிகாய்ச்சி பிழிந்த ரசத்தில் பால் சேர்த்து உட்கொள்ளலாம். பழங்கள் பால் மோர் மாமிசரசம் நெய் முதலானவைகளை முக்கியமாக உபயோகிக்கவேண்டும்.

அப்யங்கன ஸ்நானத்திற்கு

நெய் விளக்கெண்ணெய் நல்லெண்ணெய் இம்மூன்றும் சமமாக கலந்த முக்கூட்டு தேய்த்து ஸ்நானம் பண்ணுவது நலம். சிலருக்கு நல்லெண்ணெய் ஆகாவிட்டால் பாதமெண்ணெய் அல்லது நெய்யை தேய்த்து ஸ்நானம் செய்யலாம். அப்யங்கனம் செய்தநாளில் மருந்தை நிறுத்தவேண்டும்.

இதர வியாதிகளுக்கு உசிதமாக வியாதிக்கு தகுந்த பத்தியம் அறிந்து கொள்ளவும்.

பத்தியத்திற்கு ஆகாத பதார்த்தங்கள்

இளநீர் ஈச்சங்கள்ளு கடுகு காடி கிழங்குகள் குமட்டிக்காய் கொத்து கொள்ளு சாராயம் சேப்

பங்கிழங்கு தென்னங்கள்ளு தேங்காய் தேங்காய்ப் பால் பயிற்றங்காய் பழவர்க்கம் பனங்கள் பன்றிக் கறி பாகல் பாலை புகையிலை புளி பெருங்காயம் மாங்காய் மாதுளம் மாப்பண்டம் முத்தின அவரை வள்ளிக்கிழங்கு வெங்காயம் சையோகம் முதலியவைகளாம்.

பத்தியத்திற்கு உரிய பதார்த்தங்கள்

அத்திப்பிஞ்சு அவரைப்பிஞ்சு அறுகீரை ஆரைக்கீரை கத்திரிப்பிஞ்சு கருவாழைப்பிஞ்சு வாழைப்பூ காட்டுவழுதலை கோதுமை கோவைக்காய் சிறுகீரை தாளி துவரை தூதுளை நெருஞ்சில் பீர்க்கம்பிஞ்சு புடலம்பிஞ்சு புதியநெய் பொன்னாங்காணி மாங்காய்ப்பருப்பு முருங்கைப்பிஞ்சு வெண்பாலை வெண் அவரைப்பிஞ்சு வெள்ளுள்ளி வேளை உடும்பு உள்ளான் ஊர்க்குருவி காடை கவுதாரி முயல் மான் வரையாடு வெள்ளெலி ஆமை கிழங்கான் குறவை தேளி சன்னகுரு திருக்கை வரால் எலுமிச்சன்ஊறுகாய் களாக்காயூறுகாய் நுணுக்காயூறுகாய் நெல்லிக்காயூறுகாய் பாவட்டங்காயூறுகாய் ஆதளைவற்றல் மாவிலங்குவற்றல் வெள்ளரைவற்றல் வெந்நீர் முதலியவைகளாம்.

உ

கடவுள் துணை

ஆரிய அனுபோக ரகஸ்ய

வைத்திய அரிச்சுவடி

(நான்காம்பாகம்)

வியாதிகளறிய

தேறவே சந்திரனும் வாத நாடி
திறமான சூரியனும் பித்த நாடி
மீறவே யக்கினியும் சிலேத்தும நாடி
விளங்கவே வியாழமதி லங்கி மீறும்
கூறவே மந்தன்சேய் இரவி மூன்றும்
குணமான சூரியனுங் குமரி போடும்
ஏறவே திங்கள்புதன் வெள்ளி தானும்
இன்பமுள்ள சந்திரனு மோடுந் தானே. 1

காணவே யிரவியிலே வாத மோடில்
கனமான சளியிரும லிளைப்புண் டாகும்
நாணவே செவ்வாயில் வாத மோடில்
நன்மையுள்ளசுரமதுதானணுகுஞ்சொன்னேன்
தோணவே மனந்தனிலே வாத மோடில்
துணிந்ததொரு சீதளமுஞ் சன்னி பெய்தும்
வேணவே வியாழத்தில் வாத மோடில்
விலாவோடு தேகமெலாம் வலியுண் டாமே. 2

உண்டான திங்களிலே பித்த மீறில்
உத்தமனே ஜலதோஷ முடனே காணும்

பண்டான புந்தியிலே பித்த மோடில்
பாரமுட னிரேற்றம் தலைக்குத் துண்டாம்
அண்டான வெள்ளியிலே பித்த மோடில்
அப்பனே கண்ணோயுங் காது நோயாம்
தண்டான குருவினிலே பித்த மோடில்
தண்மையுறு தாபசுரந் தலைநோக் காடே. 3

குருநாடி யறிய

குருநாடி வாதமதில் நிற்கும் போது
கோழிநடை யன்னமயில் குறியா மென்ன
வருநாடி பித்தமதில் நிற்கும் போது
வளராமை யட்டையென வகுக்க லாகும்
திருநாடி சிலேத்துமத்தில் நிற்கும் போது [ணே
தெரிந்துவிழும் விட்டிலைப்போல் தெளிந்து கா
பெருநாடி சாஸ்திரத்தி லையம் வேண்டாம்
பிராணகலை தனையறிந்து மரணம் பாரே. 4

மரண மறிய

மரணமதை யறிவதற்குக் குறியைக் கேளு
வழுவாத விசைநரம்பு குளிர்ந்து காணும்
பிரணமெனும் பொறிகளெல்லாம் தளர்ந்து மெத்த
விசைநரம்பு தான்றளர்ந்து விரைந்து வாங்கி
நாநரென பற்கடித்து மணியும் கட்டும்
நாவுலர்ந்து மூர்ச்சயர்ந்து நடுக்க முண்டாய்த்
துரணமெனும்வாதபித்த சிலேத்துமமெல்லாஞ் [ம்.
சோத்தியம்பார்விட்டிலைப்போற்றுடிக்கிற்சாவா

கட்டுவாதி மாத்திரை

ஜாதிக்காய் ஜாதிபத்திரி மாசிக்காய் கிராம்4
கோஷ்டம் அதிமதுரம் அதிவிடையம் லவங்கப்

பட்டை வில்வஓடு விலாம்பிசினி வகைக்கு விராக னிடை ஒன்று.

செய்முறை:-இந்த சரக்கு ஒன்பதையும் இடித்து வஸ்திரகாயஞ்செய்து ஒரு பெரிய மாதுளங் காயினுள்வைத்து தமரடைத்து சீலேமண்செய்து அதன்மேல் சாணத்தை கவசஞ்செய்து 20-எருவில் புடமிட்டு சாணம் வெந்து காய் வேகும்போது வெளியே தண்ணீர்கொண்டு சாணத்தையும் சீலே மண்ணேயும் சுத்தப்பட அகற்றி சரக்குடன் காயை கல்வத்திலிட்டு கஞ்சாசாற்றில் அரைத்து சிறுசுண்டக்காய்ப்பிரமாணம் மாத்திரையுருட்டி நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்திக்கொள்ளவும்.

பிரமாணம்:-தேக திடமறிந்து சிறியவர்களுக்கு அரைமுதல் ஒன்றும், பெரியவர்களுக்கு ஒன்று முதல் இரண்டு மாத்திரை வடித்ததயிரில் கொடுக்க சீதபேதி சீதக்கடுப்பு நாட்பட்ட ரத்தமூலம் தீரும். தேனில் கொடுக்க அதிசாரபேதி தீரும்.

பத்தியம்:-உஷ்ணபதார்த்தங்களை நீக்கி குளிர்ச்சியான பதார்த்தங்களைக் கூட்டவும். மிளகாய் தள்ளி மிளகு சேர்க்கவும்.

சிட்டுக்குருவி வீரதத்துவ லேகியம்

ஒரு சிட்டுக்குருவியை குடல் தலை கால் ரோமம் முதலியவைபோக்கி சுத்தஞ்செய்து அதனுள் லவங்கம் ஜாதிக்காய் அபினி வகைக்கு விராகனிடை-$\frac{1}{2}$, மதனகாமேஸ்வரப்பூ கழஞ்சி-$\frac{1}{4}$, இவையெல்லாம் அரைத்து அதனுள் வைத்துமூடி நூல்சுற்றி நெய்

யில் பொரித்து எலும்பைப்போக்கி கல்வத்தில் மெழுகுபோல் அரைத்துக்கொள்ளவும். இதுபோல் ஐந்துகுருவி சித்தப்படுத்திக்கொள்ளவும்.

ஒருபலம் தேறிய கஞ்சா கொண்டுவந்து நல்ல ஜலத்தில் ஊரவைத்து பிறகு புதுஜலம்விட்டு ஏழு தரம் கழுவி சுத்திசெய்து விரை கட்டைகளைப் போக்கி, பத்துபலம் பசுநெய்யில் அரைபடி ஜலம் விட்டு அதோடு சுத்திசெய்த கஞ்சாவையும்போட்டு கலக்கி இராவடுப்பில் இரண்டுநாள் வேகவைத்து மூன்றுநாள் நீர்சுண்டக் காய்ச்சி நெய் பக்குவத்தில் வந்ததும் இறக்கி வடித்துக்கொள்ளவும்.

சரக்குகள்

ஜாதிக்காய் ஜாதிபத்திரி லவங்கம் லவங்கப் பட்டை லவங்கப்பத்திரி பரங்கிச்சக்கை சோம்பு ஏலரிசி கோஷ்டம் தாளிசபத்திரி சிறுநாகப்பூ சித்தரத்தை சுக்கு மிளகு திப்பிலி ஓமம் குரோசானி ஓமம் அமுக்கணங்கிழங்கு மராட்டிமொக்கு சூரிய காந்தி நன்னாரிவேர் வாலுளுவையரிசி பூனைக்காலி விரை நீர்முள்ளிவிரை மதனகாமேஸ்வரப்பூ சடா மாஞ்சில் சீரகம் கருஞ்சீரகம் அதிமதுரம் மாசிக் காய் வெட்பாலையரிசி நிலப்பணங்கிழங்கு பூச்சக் கரைக்கிழங்கு தண்ணீர்விட்டான்கிழங்கு கடுக்காய் தோல் தான்றிக்காய்தோல் நெல்லிவத்தல் பன்னீர் மொக்கு சந்திரகாந்தி வால்மிளகு இதுகளை இள வறுப்பாக வறுத்து இடித்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொள்ளவும். பருத்திப்பருப்பு தருபூசனி பருப்பு வெள்ளரிபருப்பு வாதுமைபருப்பு கிரக்காய்

பழுப்பு சாரப்பருப்பு தாமரைப்பருப்பு கசகசா சாலாமிசிரி திராக்ஷபழம் கஜூரக்காய் வகைக்கு பலம்-¼, இதுகளை கல்வத்தில் மைபோல் அரைத்துக்கொள்ளவும். முருங்கைவிரை அகதிவிரை ஆலவிரை அரசன்விரை ஆவாரம்விரை துத்திவிரை சொரவிரை வெள்ளரிவிரை வகைக்கு பலம் கால் இதுகளை பசுவின்பால்விட்டு அரைத்து வடிகட்டிக் கொள்ளவும்.

செய்முறை:-சர்க்கரை பலம்-10, பனைவெல்லம் பலம்-5, இவ்விரண்டையும் கொஞ்சம் ஜலம்விட்டு சுத்தப்படுத்திக்கொண்டு 3-படி பசுவின்பால் 1-படி தேங்காய்ப்பாலும் சுண்டக்காய்ச்சி அதில்மேற்படி கரைதத சர்க்கரையை கூட்டி பாகுபதத்தில் கடை சரக்குகளைப்போட்டுக் கிண்டி சரக்குகள் வேகும் சமயத்தில் பால் பருப்பினங்களைக் கூட்டி வெந்ததும் முன் சித்தப்படுத்திய நெய்யைவிட்டு 10-பலம் தேன்விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

பிரயோகம்:- காலை மாலை புன்னைக்காய் பிரமாணம் சாப்பிட்டு அதன்மேல் போதுமான பால் சாப்பிட மேகம் க்ஷயம் அஜீரணம் இரத்தக்குறைவு நீங்கி தேகபலமும் விந்தூறும்.

பத்தியம்:- பால் கோதுமை பழம் இறைச்சி முதலிய பலவிருத்தி பதார்த்தங்களாக சாப்பிடவும்.

தூதுவேளை கிருதம்

தூதுவேளை சாறு	படி	1
பூனைக்காஞ்சொரிசாறு	,,	½
கண்டங்கத்திரிசாறு	,,	½

ஆடாதோடைசாறு	படி	½
பசும்பால்	,,	2
திப்பிலி	பலம்	4
மிளகு	,,	4
கடுக்காய்	,,	4
தூராயிலை	,,	4
சுக்கு	கழஞ்சி	3
மிளகு	,,	3
திப்பிலி	,,	3
தாளிசபத்திரி	,,	3
வாய்விளங்கம்	,,	5
ஓமம்	,,	3
கோஷ்டம்	,,	3
அக்கிராகாரம்	,,	3
சீரகம்	,,	3
சித்தரத்தை	,,	3
வால்மிளகு	,,	3
ஏலம்	,,	3
கிராம்பு	,,	3
ஜாதிக்காய்	,,	3
ஜாபததிரி	,,	3

இவைகளில் கடைச்சரக்குகளை இடித்து எட்டொன்ருய்க் கியாழமிட்டு சாறுடன் கூட்டி 2-படி பசுநெய்யில்சேர்த்து குழப்பி நெய்பதத்தில் காய்ச்சி வடித்து தனியேனும் பவழச்சுன்னம் அல்லது தாளகச்சுன்னம் பஸ்பங்களில் சாப்பிட க்ஷயம் மேகம் ஊஷ்ணவாய்வு சுவாசகாசம் தீரும். இச்சாபத்தியம்.

பலம் கண் குளிர்ச்சிக்கு கைகண்டது

குருங்காடை		7
அடைக்கலாங்குருவி		7
கருவேலன்பிசினி	பலம்	½
விளாம்பிசினி	,,	½
பாதம்பிசினி	,,	½
அமுக்கனுங்கிழங்கு	,,	½
கோதுமைநொய்	,,	3
பசுநெய்	,,	5
சர்க்கரை	,,	2
தேன்	,,	3
புனுகு	குண்டுமணி	1
குங்குமபூ	,,	4
லவங்கம்	,,	8
ஜாதிக்காய்	விராகனிடை	2
ஜாபத்திரி	,,	2
அக்கிராகாரம்	,,	1
சிறுநாகப்பூ	,,	1
ஏலக்காய்	,,	2
நிலப்பனைக்கிழங்கு	குண்டுமணி	8
மதனகாமப்பூ	,,	8
அழுவினவிரை	விராகனிடை	1
திப்பிலி	,,	1
வாலுளுவையரிசி	,,	1
நிலாவிரை	,,	1
வெட்பாலையரிசி	,,	1
நீர்முள்ளிவிரை	,,	1
ஓமம்	குண்டுமணி	4

ஆனைநெருஞ்சில்	விராகனிடை	½
சுக்கு	,,	1
சமுத்திராப்பழம்	,,	2
பூனைக்காஞ்சோரி	,,	½
சாலாமிசிரி	,,	1
ரோஜாப்பூ	,,	2
லவங்கப்பட்டை	,,	1
ரூமஸ்தகி	,,	1

இவைகளில் சூரணஞ் செய்யவேண்டிய கடை சரக்குகளை சூரணித்துக்கொண்டு அடைக்கலாங் குருவியையும் குருங்காடையையும் நெய்யில்பக்குவமாக வறுத்து, எலும்பு முதலியவைகளைப் போக்கி, பாகுசெய்து அதில் எல்லாம் சேர்த்து லேகியமாக கிளரி பத்திரப்படுத்தி காலை மாலை சுண்டக்காயளவில் சமயோசிதமாக சாப்பிட்டு போதுமான பசும்பால் சாப்பிட சர்வவியாதிகளும்நீங்கி வீரியவிருத்தியுண்டாகும். இது ஒரு திவ்ய முறையாகும்.

விரைவாதத்திற்கு

பூண்டு பலம்-½, மிளகு பலம்-½: கழற்சிசமூலம் பலம்-2, இம்மூன்றும் அரைத்து ஒருபலம் சித்தாமணக்கெண்ணெயில் வேகவைத்துக் கிளரி, மூன்று பாகம் செய்து 3-நாள்சாப்பிட விரைவீக்கம் தடிப்பு நோய் நீங்கும். இச்சாபத்தியம். கைகண்டது.

வீர மெழுகு

வீரம் விராகனிடை-1, வெடியுப்பு விராகனிடை 3, நவாச்சாரம் பலம்-1, இம்மூன்றும் தூள்செய்து பீங்கானிலிட்டு பழச்சாறு-2, கோழிமுட்டை-3

போட்டு 4-¾-நாள் சூரியபுடம் வைத்து எல்லாம் சுண்டியதும் கல்வத்தில் போட்டு அரைத்து எடுத்துக்கொள்ளவும். மிளகு பிரமாணம் பனைவெல்லத்தில் வைத்துக் கொடுக்க பிரசவ அழுக்கு ஜன்னி சுரம் வாய்வு தீரும். இச்சாபத்தியம்.

சிரங்குக்கு எண்ணெய்

நீரடிமுத்து காட்டுச்சீரகம் கார்போகரிசி வகைக்கு பலம்-1 இடித்து ¾-பலம் நல்லெண்ணெயில் காய்ச்சி வடிக்கும்போது ஒரு விராகனிடை பூரம் தூள்செய்துபோட்டு இறக்கி வைத்துக்கொள்ளவும். சிரங்குகளுக்கு காலை மேலுக்குத்தடவி பகல் சீக்காய் தேய்த்து குளிக்கத்தீரும். சிரங்கு மும்முரமாகயிருந்தால் 3-நாளைக்குக் காலையில் காசெடை சர்க்கரையில் உள்ளுக்கு சாப்பிட பூரண சௌக்கியமாகும். இச்சாபத்தியம்.

சகல ரோக சஞ்சீவி என்னும் நவாச்சார ஜெயநீர்

பூநீறு சேர்-½, தாளிந்த கல்சுண்ணும்பு சேர்-2, நவாச்சாரம் வேண்டிய அளவு, ஒரு மண்பானையில் 1-சேர் கல்சுண்ணும்பைபோட்டு அதற்குமேல் ஷை பூநீறைவைத்து அதற்குமேல் 1-சேர் கல்சுண்ணும்பு வைத்து மேல்மூடி சீலைமண்செய்து கெஜபுடமிட்டு ஆறவிட்டு எடுத்து பூநீற்றை எடுத்துக்கொள்ளவும். பிறகு அந்த பூநீற்றுக்குச் சமனிடை நவாச்சாரம் சேர்த்து கசிவாகும்வரையில் அரைத்து ஒரு மண் அகலிலிட்டு மேல்மூடி சீலைசெய்து அரைசேர் வரட்டியில் புடமிடவும். இவ்விதம் 3-தடவைசெய்யவும்.

பிறகு அதனை எடுத்து பீங்கான் பாத்திரத்திலிட்டு பனியில் 2-3-தினம் வைத்துவர ஜெயநீராகும்.

அனுபானம்

எல்லாவகை தலைவலிக்கு

சுக்குகியாழம் கசகசாகியாழம் இவைகளில் ஒன்றில் 2-துளிவிட்டுக் கொடுக்கவும். மேலுக்கு பூசவும் தீரும்.

கபசம்பந்த இருமலுக்கு

இஞ்சிசுரசம் அரிசிதிப்பிலிசூரணம் ஒன்றில் 2-துளி கொடுக்கத் தீரும்.

வரட்சி இருமலுக்கு

பேதானுக்கோழையில் ஒருதுளி கொடுக்கத் தீரும்.

சுவாச காசத்திற்கு

அரிசிதிப்பிலிசூரணம் தாளிசபத்திரிசூரணம் ஒன்றில் 3-துளி கொடுக்கத் தீரும்.

பக்கநோய்க்கு

சோம்புதிராவகம் அல்லது ஓமத்திராவகம் ஒன்றில் 4-துளி கொடுக்கவும், மேலுக்குப்பூசவும்.

வயிற்றுநோய் வயிற்றுபொருமலுக்கு

சர்க்கரை சோம்புதிராவகம் வெந்நீர் ஒன்றில் 3-துளி கொடுக்கவும்.

அஜீரணத்திற்கு

சோம்புதிராவகம் சுக்குச்சூரணம் இஞ்சிகியாழம் ஒன்றில் 2-துளி கொடுக்கத் தீரும்.

பேதிக்கு

மிளகுகியாழம் சர்க்கரை ஒன்றில் 4-துளிகொடுக்கநிற்கும். பேதிநிற்கிறவரையில் உபயோகிக்கவும்.

குடல் முறுக்கு நோய்க்கு

பன்னீர் புளித்தெளிநீர் நிலாவாரைச்சூரணம் சிவதைச் சூரணம் ஒன்றில் 3-துளி கொடுக்கத் தீரும்.

அரோசிகத்திற்கு

மாதளம்பழச்சாறு நெல்லிக்காய்ச்சாறு தேன் ஒன்றில் 3-துளி கொடுக்கத் தீரும்.

இரைப்பை சம்பந்த ரோகத்திற்கு

ஏலக்காய்ச்சூரணம் மிளகுசூரணம் சீரகச்சூரணம் ஒன்றில் 3-துளி கொடுக்கத் தீரும்.

வங்க செந்தூரம்

கருவங்கம் விராகனிடை-10, ரசம் விராகனிடை-10, உருக்கு முகத்தில் கையோடு எடுத்து வைத்துக்கொண்டு கெந்தகம் அரிதாரம் மனோசிலை சுத்திசெய்து வகைக்கு விராகனிடை-10, ராவிக்கொண்டு பொடி செய்து கத்தாழை சோற்றில் போட்டு ரசத்தைவடித்து வங்கத்தையரைத்து கெடி சோற்றுக்குள் பொதிந்து ஓடு மூடி சீலை செய்து கோழிபுடம்போட செந்தூரமாகும் பணவெடை நெய்யில் கொடுக்க நீரொழுக்கு தீரும். சர்க்கரையில் கொடுக்க சுரம் தீரும். கரிப்பான்சாற்றில் கொடுக்கில் பாண்டு காமாலை தீரும். கைகண்டது.

லிங்கச் செந்தூரம்

பொட்டிலுப்பு பலம்-12, துருசு சீனம் கடல் நுரை மூடுகிளிஞ்சல்சதை கழுதைபூநீர் அண்ட வெள்ளை இதுகளை அரைத்து 50-எருவில் புடமிடத் தீரும். நீற்ற சுன்னத்திற்கு இடைக்குப்பாதி சாரம் சேர்த்து கல்கார்க்கு புட்டியில்போட்டு 10-நாள் சாக்கடையில் புதைத்தெடுக்க ஜெயநீராகும். லிங்க செந்தூரத்திற்கு ஆடுதிண்ணாப்பாளைசாறு கொண்டு சரிபாதிக்கு கலந்து 2-ஜாமம் சுருக்கு கொடுத்து செங்கல்லை மட்டமாக தேய்த்து அதற்குள் வீரம் விராகனிடை-$1\frac{1}{4}$, தாளகம் விராகனிடை-$2\frac{1}{2}$, ஒரு பலம் லிங்கத்திற்கு கீழ் மேலாக வைத்து மேல் கல் மூடி உளுந்து அரிசிமாவு அரைத்து 7-சீலை செய்து புடம்போடவும் வீரம் தாளகம் தனித்தனியாக அரைப்பு. இதில் எல்லா சரக்கும் மடியும்.

குழந்தை மாத்திரை

அரத்தை ரோகணி தேவதாரம் காயம் வாளம் வகைக்கு பலம்-$\frac{1}{4}$, கோரைக்கிழங்கு சார்விட்டரைத்து சுண்டக்காய்ப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி பனைவெல்லத்தில் கொடுக்க பேதியாகும். சோகை காமாலை பாண்டு நீர்கோவை சூலை வாய்வு திரட்சி வைப்பு எல்லாந்தீரும். கைகண்டது.

சூதக வாய்வுக்கு

பூரம் லிங்கம் விராகனிடை அரை, எள்ளெண்ணெயில் 3-நாள் காலையில்குழைத்துகொடுக்க சூதக வாய்வு தீரும். புண் கிரந்திக்கு உப்பில்லாத பத்தி

யம். விரைவாதம் சூலைக்கு கொடுக்கலாம். பால் தயிர் இச்சாபத்தியம். கைகண்டது.

மேகம் செம்மேகம் கரிமேகம் படைகள் செவ்வட்டை கைகால் குறைந்த ரிணங்களுக்கு கைகண்டது

மணிப்புங்கன்பட்டை அறுகண்வேர் நீரடி முத்து வகைக்கு வீசை-1 சேர்த்து குழித்தயில மிறக்கி 2-தம்பிடி யிடை கேழ்வரகுமாவில் கொடுக்கவும் காலை மாலை 10-20-நாள் இச்சாபத்தியம்.

சார ஜெயநீர்

நவாச்சாரம் வீசை-1, சுண்ணாம்புக்கல்லு படி 7, சாரத்தைக் கொஞ்சங்கொஞ்சமாக சுண்ணாம்புக் கல்லில் கீழ் மேலாக வைத்து தண்ணீர் தெளித்து தாளித்து ஜலம்விட்டுக் கழுவி சட்டியில்விட்டு காய்ச்ச உப்பு கட்டும். அதை எடுத்து ஒரு பழைய தோண்டியில் சிறிய துவாரம் அடியில் செய்து பீங்கான்வைக்க ஜெயநீர் இறங்கும் மழை பனிநாளில் சரியாய் இறங்கும். இதையும் வெடியுப்பு ஜெயநீரையும் சேர்த்து சகல சரக்கையும் கட்டலாம்.

பாஷாணக் கட்டு

சோத்துப்பு வெடியுப்பு சீனக்காரம் வெண்காரம் சாரம் இவை சமனிடை பொடிசெய்து ஒரு வாய் அகல சாணையில்போட்டு எரிக்கவும். பிறகு எடுத்து பொடியாக்கி 5-பங்காக்கி ஒருபங்கை ஒரு சட்டியில்கொட்டி அதற்குமேல் ஒருஓட்டில் பச்சை பாஷாணத்தைப் பொடிசெய்துவைத்து மேல்சட்டி

மூடி சவசம்செய்து எரிக்கவும். இப்படி 5-தரம் செய்ய பாஷாணக்கட்டாகும். (பாஷாணமெல்லாம் மேல்சட்டியில் பதங்கமேறும் பிரதி தடவையும் சுறண்டி எடுக்கவும்) அந்த பாஷாணம் பலம்-1, வங்கம்பலம்-1, வெள்ளிபலம்-1, வெள்ளியையுருக்கி அதில் வங்கங் கொடுக்க வெட்டையாகும். அதை எடுத்து கல்வத்தில்போட்டு கூட பாஷாணம் ஒரு பலம்போட்டு ஜெயநீர்விட்டு அரைத்து பில்லைதட்டி 5-புடமிடக் கடுங்கார சுண்ணமாகும் இதை செம்பு மீதில் கொடுக்க வெள்ளியாகும்.

சார நீறு

புளியம் சாம்பலை ஜலம்விட்டு காய்ச்சி உப்பை யெடுத்து மேனிச்சாறுவிட்டரைத்து குகைசெய்து அதில் சாரம்வைத்து சில்லிட்டு சீலைசெய்து குக்கி டம் புடமிட நீறும்.

தாளக பஸ்பம்

தாளகத்தை சுத்தம் செய்துக்கொண்டு சரக் கொண்ணைச்சமூலம் உலரவைத்துசாம்பலாக்கி ஒரு குண்டுசட்டியில் கீழ்மேல்போட்டு அதனுள் தாள கத்தை வைத்து அதில் ஒரு சுப்பலை பொதித்து தெரியும்படியாய்வைத்து சிறுதீயெரிக்கவும். மேற் படி குச்சி எரிந்து மடியும் பக்குவத்தில் தீயை கிறுத்தி ஆறியபின் எடுத்துப்பார்க்க பஸ்பமாகும். தாளகத்தை ஆற்றுத்தும்மட்டிக்காய்க்குள் வைத்து மண்சீலைசெய்து காயவிட்டு ஒரு விரட்டியில் புட மிடவும். பிறகு எடுத்து காய்க்குள் வைத்து இரண் டெறுவில்புடமிடவும். இதுபோல் ஒவ்வொருபுடத்

திற்கு ஒவ்வொரு விரட்டி அதிகப்படுத்தி மெழுகா கிறவரையில் புடமிடவும்.

தாளகபஸ்பம் கவுதும்பை இலையிலும் கள்ளிச் சாம்பலிலும் பஸ்பமாகும்.

தாளகச் செந்தூரம்

சுத்திசெய்த தாளகம் பலம்-1, கற்பூரம் பலம் 1, படிகாரம் பலம்-1, ஒரு குடுவையில் முதல் படி காரப்பொடியைக் கொட்டி அதற்குமேல் கற்பூர பொடியைக்கொட்டி, அதற்குமத்தியில் தாளகத்தை வைத்து, அதற்குமேல் கற்பூரத்தை கொட்டி, அதற்குமேல் படிகாரத்தை கொட்டி கொட்டணம் பண்ணி சீலைசெய்து 4-5 எருவில் புடமிட செந் தூரமாகும்.

தங்க பஸ்பம்

குந்தன தங்கரேக்கு விராகனிடை-1, செம் முள்ளி ரசத்தில் நிறம்மாற அரைத்து பில்லைதட்டி நிழலிலுலர்த்தி 7-சீலைசெய்து 20-வரட்டியில் புடம் போடவும், பஸ்பமாகும். சிகப்பாகாவிட்டால் மறு தரமும் அரைத்து புடம்போட பஸ்பமாகும்.

வேறு தங்கபஸ்பம்

தங்கரேக்கை செப்பு நெருஞ்சிசாற்றாலரைத்து பில்லைதட்டி காயவைத்து புடமிட பஸ்பமாகும்.

துருசு பஸ்பம்

துருசு பலம்-1, வெள்ளை கஸ்தூரிபட்டைப்பூ பலம்-9, இந்த பூவை அரைத்து துருசுக்கு கவசம்

செய்து 3-சீலேமண்செய்து இந்தளடைக்கு 3-எடை வரட்டிஅடுக்கி புடமிட பஸ்பமாகும். கைகண்டது.

தம்பாக்கு முறை

துருசு பலம்-1, கெந்தி விராகனிடை-2, வீரம் விராகனிடை-½, தாளகம் விராகனிடை-½, வெண்காரம் சேர்த்து மூசைக்கு சீலேமண்செய்து உருக்க தம்பாக்காகும். கைகண்டது.

பாஷாணக் கட்டு

பாஷாணம் பலம்-1, சுத்திசெய்து அயக்கரண்டியில் வைதது முந்திரிசார்விட்டு இரண்டு ஜாமம் சுருக்கிட கட்டும்.

தாளக பஸ்பம்

மிளகரணை இலையை அரைத்து கவசம் செய்து 3-4-விரட்டியில் புடமிட பஸ்பமாகும்.

தாளக சுத்தி

தாளகத்தை சுண்ணம்பு கல்லில் வைத்து சிறு நீர்விட்டு தாளிக்கவும். இம்மாதிரி 21-தரம் செய்ய சுத்தியாகும்.

தாளகச் சுன்னம்

சுத்திசெய்த தாளகத்தை கவுதும்பைச் சாற்றாலரைத்து பில்லேதட்டி கிளிஞ்சல்கொண்டுவந்து நீர் தெளித்தால் பூர்த்துவிடும். பூர்த்த சுண்ணம்பை ஒருகுடுவையில்போட்டு கெட்டனம்பண்ணி அதன் பேரில் பில்லையைவைத்து அதன்மேலே மறுபடியும் சுண்ணம்பைபோட்டு கெட்டனம் பண்ணி சில்

விட்டு சீலமண்செய்து புடமிடவும். பிறகு எடுத்து மறுபடியும் சுண்ணாம்பு ஜலம்விட்டரைத்து பில்லை தட்டி காயவைத்து மேற்கண்ட பிரகாரம் புடமிட சுன்னமாகும்.

நித்திய சஞ்சீவி

காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலையில் கடுக்காய் மண்டல முண்ண
கோலை யூன்றி குறுகி நடப்பவர்
கோலை விட்டு குலாவி நடப்பரே.

கண்ணுக்கு மை

பொன்னாங்காணி	இஞ்சி
கீழ்க்காய்நெல்லி	ஆவின்பால்
நெய்சிட்டி	நல்லெண்ணெய்

இவைகள் சமனிடை கூட்டி பதமாய்க்காய்ச்சி வடித்து 1-2-துளி கண்களிலிட கண்மறைவு சாலேஸ்வரம் நீர்நீர் முதலியவைகள் தீரும், நல்லமுறை, கைகண்டது.

கண் தைலம்

ஜலம் விடாமல் பிழிந்த தேங்காய்ப்பாலில் எடுத்த எண்ணெய் ஒருபலத்தில் காற்பலம் பீத ரோகணியை நறுக்கிப்போட்டு 48-நாள் சூரியபுடம் வைத்தெடுத்து வேண்டும்போது 1-2-துளி கண்களி லிட பித்தநீர் வாதநீர் சிலேத்துமநீர் நீர்நீர் தலை வலி ஒற்றைத்தலைவலி முதலியவை தீரும். கண்கள் பிரகாசப்படும்.

ஐந்துப்பு கட்டு

இந்துப்பு	சோத்துப்பு
வளையலுப்பு	வெடியுப்பு
கரியுப்பு	வகைக்குப் பலம்-1

இந்த ஐந்துப்பும் கல்வத்திலிட்டு அரைத்துக் கொண்டு சிறு கலயத்திற்குள் சேர்த்துக் கத்தாழை சோற்றைப் போட்டு ஒருபலம் வெண்காரத்தைப் பொடியாக்கி கலயத்தில் பாதிபோட்டு உப்பை அதன்மேல்வைத்து மறுபடியும்சோற்றைப்போட்டு 7-சீலைசெய்து 25-விரட்டியில் புடமிட உருகி கட்டாகும். தக்க அனுபானங்களிலிட வாய்வு அஜீரணம் குன்மம் முதலியவை தீரும். இச்சாபத்தியம்.

வெடியுப்பு கட்டு

வெடியுப்பு	பலம்	2
பாரையுப்பு	,,	1
இந்துப்பு	,,	1
புளி	,,	½

இதுகளை நன்றாயரைத்து கலயத்திலிட்டு சீலை செய்து 10-முட்டையில் புடமிட்டெடுத்து தூள் செய்துக்கொண்டு பணவிடை அனுபானங்களில் சாப்பிடவும். எரிகுன்மம் நெஞ்செரிச்சல் பித்த எரிச்சல் வாய்வுகளுக்கு நீராகாரத்தில் சாப்பிடவும். இச்சாபத்தியம்.

விரைவாதத்திற்கு எண்ணெய்

நல்லெண்ணெய்	பலம்	5
கழற்சிபருப்பு	,,	2

எருக்கம்பூ	பலம்	1
நிலப்பனக்கிழங்கு	,,	¼
சித்திரமூலவேர்	,,	½
முடக்கத்தான்சாறு	,,	½
பச்சைகற்பூரம்	விராகனிடை	¼

இதுகளை பக்குவப்படி காய்ச்சி வடித்து கரண்டிவீதம் 3-5-7-நாள்சாப்பிட விரைவாதம்முதலிய சகல வாதமும் தீரும். இச்சாபத்தியம்.

லேப்திலா

சித்தான லேபனத்தைச் சொல்லக் கேளு
சிறப்பான தாழம்பூ தாளி செந்தேன்
முத்தான கருங்கோழி முட்டைத் தோலும்
மூதண்ட கற்பூரம் சேர்த் தரைத்து
கொத்தான லிங்கத்தில் லேபித் தேதான்
குமரிகளைப் புணர்ந்தக்கா லாசை நீங்காள்
செத்தாலும் கூடவே வருவாள் பெண்கள்
செய்தவொரு லேபனத்தின் மகிமை தானே.

போக சஞ்சீவி

தாளி முறுங்கை தழைதூ தளைபசளை
வாளி யறுகீரைநெய் வார்த்துண்ண — வீரியவு
மிஞ்சுவார் போகத்தில் மேல்விழுந்து மாதரெல்லாம்
கெஞ்சுவார் பின்வாங்கு வார்.

காயங்களுக்குக் கட்டு

ஆதண்டனிலையை வதக்கி 7-இலை தலைமாத்தி வைத்து கட்ட ஆராதபுண் அடி காயம் எலும்பு முறிவும் புரை-புழு முதலியவை தீரும்.

10176
LC
N51,1

பீனிசத்தைலம் கைகண்டது

சவுரிப்பழம்		4-5
பசும்பால்	படி	½
நல்லெண்ணெய்	,,	½
வெள்ளைமிளகு	பலம்	¼
அபினி	விராகனிடை	1

இதை காய்ச்சி வடித்து ஸ்நானம்செய்ய பீனிசம் நிவர்த்தியாகும். புளி நித்திரை நீக்கவும்.

நிவாரணபாம்

வாஸ்லின்	அவுன்ஸ்	2
ஹாட்பேரபின்	,,	2
கற்பூரம்	,,	1
யூகலிப்டஸ் ஆயில்	டிராம்	3
கற்பூரதைலம்	,,	5
மென்தால்	,,	3
கெஜபட்டாயில்	,,	3
லிக்கர் அமோனியா	,,	1½

செய்முறை:—வாஸ்லினையும் ஆட்பேரபின்னையும் காய்ச்சி உறவாக்கி ஆறியதும் அதில் மற்ற சரக்குகளை ஒன்றாய்க்கலக்கி புட்டியில் அடைக்கவும். இது மேலுக்கே உபயோகமாகும்.

பிரயோகம்:—தலைவலி கழுத்துநோய் இடுப்புவலி ஒற்றைத்தலைவலி தலைவலி வாய்வுநோய் கீல்நோய் பூட்டுவலி தேள்கடி ஜலதோஷம் சந்து

வாதம் இசிவு முதலிய வாத சீதள நோய்களெல்லாம் தீரும்.

பெண்கள் வீட்டுதூரமாகாமுன் வயிற்றுவலி கண்டால்

பெருஞ்சீரகம்	பலம் அரைக்கால்
மையூர்சிக்கி	,,
சடாமாஞ்சி	,,
அனிசூன்	,,
அஜமத் ஓமம்	,,
பர்கியாஸ்	,,
மாவிலிங்கப்பட்டை	,,
சித்திரமூலப்பட்டை	,,
சரக்கொண்ணைபழத்தில் பட்டை	,,
குசும்பாவிரை	,,
வாய்விளங்கம்	,,
நாட்டுச்சர்க்கரை	பலம் ¼

இதைப்போல் மூன்றுநாள் இடித்துப்போட்டு அரைபடி தண்ணீர்வைத்து ஒருமாகாணி தண்ணீர் இறக்கி கொடுக்கவும்.

கர்ப்ப ஸ்திரீகளுக்கு மலம்போகவும் நீரடைப்புக்கும் கியாழம்

வாய்விளங்கம்	பலம்	¼
சோம்பு	,,	¼
கண்டத்திப்பிலி	,,	¼
வெள்ளரிவிரை	,,	¼
மணத்தக்காளிவற்றல்	,,	¼

இவைகளை இடித்து நாலுமாகாணி தண்ணீர் வைத்து ஒருமாகாணியாக சுண்டவைத்துவடிகட்டி கொடுக்கவும்.

தலை வலிக்கு

சுக்குத்தூள் சீந்தல்சர்க்கரை தேன் இதுகளை ஓரிடை எடுத்து துணியில் கட்டி முகர தீரும்.

ஜன்னிக்கு நசியம்

இலுப்பைக்கட்டியை நன்ருக இடித்து வஸ்திர காயஞ்செய்து சீசாவில் வைத்துக்கொண்டு கொஞ் சம் துணியில் வைத்துககொண்டு நீரில் நனைத்து 2-நாசியிலும் 2-சொட்டு பிழிந்துவிடவும். பல் கட்டி இருந்தாலும் விட்டுப்போகும். பின்ருல் உள்ளுக்கு மருந்து கொடுக்கலாம்.

மேகராஜாங்க மெழுகு

செய்முறை:

பரிதியே கற்பூரம் பலந்தா னென்று
பாவையர்பா லூரவைத்து மற்று நாளும்
முருகாமல் நீரதனி லலசிப் போடு
உத்தமனே காய்ந்தபின்பு பொடிய தாக்கி
மெருகான கொப்பரைக்காய் கொத்து மல்லி
நேர்த்தியாய் லவங்கப்பூ ஓமம் வெண்ணை
வருகிறசீதார் துவர்ப்புக்கு பனையின் வெல்லம்
மக்களே பணயிடைதான் பாதி கொள்ளே.

தீரும் வியாதிகள்:

கொண்டிடவே பரங்கிப்புண் கிரந்தி சூலை
　　கொடிதான அரையாப்பு யோனி சூலை
வென்றிடவே நாவரட்சி சன்னி தோஷம்
　　விதமான சந்திடுப்பு அஷ்ட குன்மம்
நொண்டியிடு வாதமொடு முடக்குப் புண்கள் [கும்
　　நொறுக்கிடுமே பௌத்திரங்கள் நொடியிற்போ
தென்றிசையில் வைத்தியர்க்கிது ஒன்றே போதும்
　　சித்திதுவே புளிபுகையும் தூரத் தள்ளே.

கெம்புக்கல்

வெளுத்த மட்ட கெம்புக்கல் இரண்டுகோடி கல்லுக்கு மஞ்சள் துத்திப்பூவை அரைத்து கவச முருட்டி அதற்குமேல் கோதுமை அல்லது அருட் மாவை கவசித்து உருபடி முத்தியசேவல்கோழிக்கு கொடுத்து ஒருநாள் கட்டில்வைத்து மறுநாள் கோழியை அறுத்து குடலிலும் தீனிக்கல்பையில் பார்த்து எடுக்கவும். இதுபோல் மூன்று சேவலுக்கு கொடுத்து எடுக்க கல் சிகப்புவர்னம் அதிகமாகும்.

பல்பொடி

கற்பூரம்	பலம்	1
சாம்பிராணி	,,	½
வால்மிளகு	,,	½
மருதம்பட்டை	,,	1
படிகாரம்	,,	5
கிச்சிலிக்கிழங்கு	,,	½
தான்றிக்காய்	,,	½

ஜாதிக்காய்	பலம்	½
வேலம்பட்டை	,,	1
கடுக்காய்	,,	1
லவங்கம்	,,	1
லவங்கப்பட்டை	,,	2½
சுக்கு	,,	½
ஆவாரம்பட்டை	,,	½
எருக்கம்பூ	,,	½
அக்ராகாரம்	,,	½
தென்னங்குரும்பி	,,	2½
கொட்டைப்பாக்கு	,,	1
சீமைசுண்ணும்பு	,,	2½
உப்பு பஸ்பம்	,,	1
கல்நார் பஸ்பம்	,,	2½

இதில் கடைச்சரக்குகளை யிடித்து வஸ்திர காயஞ்செய்து அதோடு உப்புபஸ்பம் சீமைசுண்ணும்பைப் போட்டு கலக்கி, தினம் பல் துலக்கிவர 32-தந்த வியாதிகளும் நீங்கி பல் இறுகும். எல்லோரும் தினம் உபயோகப்படுத்தலாம்.

காரீய பஸ்பம்

காரீயத்தையும் ஆடாதோடை ரசத்தையும் ஒரு சட்டியில்போட்டு ஆடாதோடை கொம்பினுல் கிண்டி கிண்டி நாலுஜாமம் வறுக்க பஸ்பமாகும்.

சாரக்கட்டு

பொட்லுப்பு	பலம்	1
சோத்துப்பு	,,	1
அப்ளாகாரம்	,,	1

இவை மூன்றும் பொடித்து ஒருபலம் சாரத்திற்கு கீழ்மேல ஒரு சட்டியில்போட்டு அரைமணிநேரம் சிறுதீ எரித்து இரண்டுமணிநேரம் பெருந்தீ எரிக்கக் கட்டும்.

வேறு சாரக்கட்டு

நவாச்சாரம் 1-க்கு ஆமையோடுதூள் அல்லது ஆட்டு எலும்புத்தூள் பலம்-1½ கீழ்மேல்வைக்கவும். முருங்கையிலை யரைத்து குகைசெய்து கவசமிட்டு 2-சீலைசெய்து 20-எருவு புடமிட கட்டும்

தாளக பஸ்பம்

வெள்ளைபத்ராக்ஷியிலையை அரைத்து தாளகத்துக்கு கவசம்செய்து புடமிட பஸ்பமாகும்.

வேறு தாளக பஸ்பம்

சுத்திசெய்த தாளகத்தை கழுதைகுறத்திமலத்தில் பொதித்து ஓட்டில் சீலைசெய்து புடமிட பஸ்பமாகும்.

துருசு செந்தூரம்

துருசு	பலம்	1
சீமை காட்டாமணக்குகொழுந்து	,,	9

மேற்கண்ட பிரகாரமே செய்ய செந்தூரமாகும்.

அசல்முறை சண்டமாருதம்
(வாய் பிடிக்காது)

லிங்கம்	பலம்	2
பூரம்	,,	1
கெந்தி	,,	$\frac{1}{2}$
வீரம்	,,	$\frac{1}{2}$
ரசசெந்தூரம்	,,	$\frac{1}{2}$

இந்த ஐந்தையும் பச்சைவெட்டையாக அரைத்து உபயோகிக்கவும்.

கருடன்கிழங்கு எண்ணெய்

செய்முறை:—மைபோலிடித்து நிழலில் உலர்த்திய

கருடன்கிழங்கு	பலம்	12
வாய்விளங்கம்	,,	1
வாளுலுவையரிசி	,,	1
சுக்கு	,,	1
மிளகு	,,	1
திப்பிலி	,,	1
சீரகம்	,,	1
வெங்காயம்	,,	12
சித்தாமணக்கெண்ணெய்	படி	அரை

இவையாவும் ஒன்றுசேர்த்து பதமாக காய்ச்சி வடித்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—சிறுகரண்டி அளவு சாப்பிட நன்றாக பேதியாகும். பேதி அதிகமானால் மறுநாள் எண்ணெயைக் குறைத்தும், பேதி ஆகாவிட்டால் எண்ணெயின் அளவை அதிகப்படுத்தியும் சாப்பிட

வேண்டியது. இவ்வாறு 5-10-20 அல்லது 48-நாள் ஒருமண்டலம் ஆறவிட்டு ஆறவிட்டு கீழ்சொல்லிய படி ஸ்நானமுஞ் செய்து சாப்பிட வேண்டியது. இவ்வாறு ஒருமண்டலம் கணக்கிடுவது ஆழ்ந்த வியாதிகளுக்சேயாம். சுவல்ப வியாதிக்கு 5-7-நாட்களே போதுமானதாகும்.

தீரும் வியாதிகள்:—கிரந்தி குஷ்டம் கரிமேகம் வெள்ளை அரையாப்பு மேகரெணம் மேகவூரல் வெடிப்பு புழுவெட்டு மலக்கட்டு வயிற்றிரைச்சல் வாதரோகம் ஆசனரெணம் முதலியவைகள் போம்.

பத்தியம்:—சிறுபயறு சம்பா அரிசிச் சாதம் சமைத்துச் சாப்பிடவும்,

ஸ்நானம்

வெட்டிவேர்	பலம்	1
வில்வப்பழம்	,,	1
சதாபபூ	,,	1
கோஷ்டம்	காசெடை	1
அறுகன்வேர்	,,	1
பூலாக்கிழங்கு	,,	1
சீந்தில்	,,	1
சடாமாஞ்சில்	,,	1
கற்கடச்சிங்கி	,,	1
நெல்லிவற்றல்	,,	1
சீரகம்	,,	1
கண்டுபரங்கி	,,	1
சந்தனத்தூள்	பலம்	2
சிறுதேக்கு	,,	¼

நல்லெண்ணெய்	படி அரை
சீனாகற்கண்டு	விராகனிடை 1

இவையாவும் ஒன்றுசேர்த்து பதமாகக்காய்ச் வடித்து வைத்துக்கொள்ளவும். மேல்மருந்து சா பிட்டு ஸ்நானத்திற்கு இதைதேய்த்து சீக்காய் வெந் நீரில் ஸ்நானஞ்செய்து துவரை ஆட்டிறைச்சி கூட்டவும்.

சுக்கில ஸ்தம்பனம்

அமுக்கனாங்கிழங்கு
எள்ளு
உளுந்து
நெரிஞ்சில்
தண்ணீர்விட்டான்கிழங்கு

இவைகள் சமனிடை கொண்டு இடித்து வ திரகாயஞ்செய்து காலை மாலை எழுநாள் திரிகடி பிரமாணம் சாப்பிட்டு பாலருந்த சுக்கிலஸ்தம்பன மும் பலவிருத்தியும் உண்டாகும். புளி நீக்கவும்.

வைத்திய அரிச்சுவடி

3 - 4 - பாகங்கள் முற்றிற்று.

101768
C
151 1
MADRAS ARCHIVES

இனி இதன் 5-ம்பாகம் முதற்கொண் தயாரிகி வருவதால் கூடியசீக்கிரம் வெளிவரும். ஆதலால் எமது தெய்வமகள் பதிப்பை கவனித்து வாங்கவும்.

தெய்வமகள் பதிப்பின்

வைத்திய புத்தகங்கள்

பெருமுறை பாக்கெட் வைத்தியம்

கலிகோ பயிண்டு விலை ரூபா	2	0

வைத்திய அரிச்சுவடி

4-பாகங்கள் ஒரே பயிண்டு	1	8
ஷை 4-பாகங்கள் கலிகோ பயிண்டு	2	0

மாட்டுவாகடம்

தனி பயிண்டு விலை ரூபா	2	[illegible]
தனி கலிகோ பயிண்டு விலை ரூபா	2	[illegible]

அசுவசாஸ்திரம்

தனி பயிண்டு விலை ரூபா	2	[illegible]
தனி கலிகோ பயிண்டு விலை ரூபா	2	[illegible]

மாட்டுவாகடம்-அசுவசாஸ்திரம்

2-ம் சேர்ந்த கலிகோ கட்டடம்	5	0

பச்சிலை வர்க்க பசுமூலிகை அகராதி

112-பக்கங்களடங்கியது விலை ரூபா	1	0
ஷை கலிகோ பயிண்டு விலை ரூபா	1	8

பதிப்பாளர்:

அ. குழந்தைவேல் முதலிய

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை